# பூங்கனி

THE POONKANI

பூங்கனி

கனி 03 சிறுவர் மாத இதழ் ஜுன் 2005




# Reebok City


- சகலருக்கும் தேவையான சகலவிதமான பாதணிகளையும் பெற்றுக்கொள்ள.....



- அன்பளிப்புப் பொருட்கள், அழகுசாதனப் பொருட்கள், விளையாட்டுப் பொருட்கள்.....



- சகலவிதமான கடிகாரங்கள்....
- Bag வகைகள், வாசனைத் திரவியங்கள் போன்றவற்றைப் பெற்றுக்கொள்ள.....



## Reebok City

**இல. 87, கண்டிவீதி, வவுனியா.**

உரிமையாளர் : K. கிருஷ்ணாநந்தன்

பூங்கனி
சிறுவர் மாத இதழ்
A Monthly magazine for children
கனி - 03 ஜூன்- 2005

ஆசிரியர் பார்வையில்

## புறந்தள்ள முடியுமா?

**வணக்கம் வாசகர்களே!**

கனி-03ல் உங்களோடு கலப்பதில் மகிழ்ச்சி. முதலில், இம்முறை க.பொ.த (உ/த) பரீட்சை எழுதும் மாணவர்களுக்கு எமது இனிய வாழ்த்துக்கள்.

நாளுக்குநாள் பூங்கனியின் வாசகர்தொகை அதிகரித்து வருவதை வந்துசேரும் கடிதங்கள் எடுத்துக்காட்டுகின்றன. அனைத்து வாசகர்களுக்கும் எமது நன்றிகள்.

கடந்த இரு இதழ்களிலும் இடம்பெற்றிருந்த சில தவறுகளைப் பலர் சுட்டிக் காட்டியிருந்தீர்கள். குறிப்பாக எழுத்துப்பிழை! இனிமேல் அத்தகைய தவறுகள் நேர்ந்திடா வண்ணம் பார்த்துக் கொள்கிறோம்.

இவ்விதழில் பல புதிய அம்சங்களைச் சேர்த்திருக்கிறோம். குறிப்பாக "பூங்கனியின் தேடல்." திறமை உள்ளவர்களைத் தேடி, அவர்களை அறிமுகப்படுத்திக் கௌரவிப்பதே எமது நோக்கம்.

இன்னும் பல புதிய பகுதிகளையும் அவ்வப்போது சேர்ப்பதற்கு தீர்மானித்திருக்கிறோம். வெகுவிரைவில் "மாபெரும் சிறுகதைப்போட்டி" ஒன்றினை நடத்துவதாக உள்ளோம். இதைப் பற்றிய விபரங்களை விரைவில் அறியத்தருவோம்.

பூங்கனியின் உள்பக்கங்களை வர்ணத்தில் தரமாட்டீர்களா? என்ற வேண்டுகோள் பலவாசகர்களிடத்திலிருந்து வருகிறது. உங்கள் வேண்டுகோளைப் புறந்தள்ளமுடியுமா? சற்றே பொறுத்திருங்கள் ஆவன செய்கிறோம்.

சரி வாசகர்களே, கனி-03ற்கு காலடி எடுத்து வையுங்கள். இது உங்கள் பூங்கனி! உரிமையோடு வாசியுங்கள், கூடவே கருத்துக்களையும் தெரியப்படுத்துங்கள். மீண்டும் கனி-04ல் கலப்போம்.

நன்றி.

அன்புடன் ஆசிரியர்.

**வாசித்தலினூடே வாழ்வைக் காண்போம்.**

ஆசிரியர் : கே.ஆர்.றஜீவன்
பக்க வடிவமைப்பு : கே.திலீபன்
முகாமையாளர் : ஏ.ஆர்.இராஜேஸ்வரன்


# பாப்பா பாடல்

**- கவிஞர் கோகுலதாஸ்**



வண்ணத்துப் பூச்சி வண்ணத்துப் பூச்சி
பிடிக்கப் போகிறோம்.
சின்னச் சிட்டாய் சின்னச் சிட்டாய்
பறந்து போகிறோம்.
(வண்ணத்துப்......)

அண்ணன் தம்பி தங்கையோடு
சேர்ந்து போகிறோம்
அழகழகாய் தமிழில் பேசி
ஆடிப் போகிறோம்.
(வண்ணத்துப்......)



வண்ண வண்ண பூச்சிகளை
வளைத்துப் பிடிக்கிறோம்
கையில் பட்ட வண்ணங்களை
பார்த்துச் சிரிக்கிறோம்
(வண்ணத்துப்......)

வண்ணத்துப் பூச்சி வாழ்வினிலே
துன்பமில்லையே ~ நாமும்
அதைப் புரிந்து கொண்டால்
என்றும் இன்பமே!
(வண்ணத்துப்......)




இது ஒரு வித்தியாசமான ஓட்டப்பந்தயம் தலையங்கத்தில் சொல்லப் பட்டுள்ளதுபோல இதனை பக்கத்திற்குப் பக்கம் ஓடி ஓடித்தான் படிக்கவேண்டும். சரி "போரும் சமாதானமும்" என்ற நூலை எழுத்தியவர் சேக்ஸ்பியர் என்று சொல்பவர்கள் 20ம் பக்கத்திற்கும், லியோடால்ஸ்டாய் என்று சொல்பவர்கள் 15ம் பக்கதிற்கும் ஓடுங்கள்.



பாகிஸ்தான் என்ற சொல்லின் அர்த்தம் "புனிதர்களின் நாடு"

# சொன்னதெல்லாம் நடக்கிறது

ஓவியம் ஜீவன்

கதை – பூங்கனி கதை இலாகா






தென்அமெரிக்கா கண்டத்தில் 12 நாடுகள் உள்ளன.






இரு பிரதமர்களால் ஆளப்படும் நாடு “கம்பூச்சியா”

# ஜூன் மாதம் நடந்தவை

| | |
|---|---|
| [illegible] | :- [illegible]ர் ஓட்டக் கற்றுக்கொள்ளும்போது "L"போர்ட் பாவிப்பது [illegible]ரிட்டனில் அறிமுகப்படுத்தப்பட்டது. |
| [illegible] | :- [illegible]லஸ்தீன விடுதலை இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. |
| [illegible] | :- [illegible]லக்கியவாதி வ.வே.சு. ஐயர் மரணம். |
| 04-06-1927 | :- முதன் முதலாக காற்றடித்த ரயர் கொண்ட பேருந்து லண்டனில் வெள்ளோட்டம் விடப்பட்டது. |
| 05-06-1947 | :- "மார்சல் திட்டம்" அறிமுகப்படுத்தப்பட்டது. |
| 06-06-1981 | :- முதன் முதலாக பரிசோதனைக் குழாய் குழந்தை பிறந்தது. (அவுஸ்திரேலியாவில்) |
| 07-06-1905 | :- நோர்வே, சுவீடனில் இருந்து பிரிந்து சுதந்திரம் பெற்றது. |
| 08-06-1920 | :- இத்தாலியில் "ரொட்டிக் கலகம்" ஆரம்பித்தது. |
| 09-06-1914 | :- நோபல் பரிசுபெற்ற முதல் பெண்மணி "பெர்தாவன் சட்னர்" காலமானார். |
| 10-06-1942 | :- போலந்து நாட்டில் ஆயிரக் கணக்கானோரை ஹிட்லர் கொலை செய்தார். |
| 12-06-1992 | :- இந்தியாவின் மருத்துவ இதழ் "மெடிநியூஸ்" (Medi News) வெளியானது. |
| 14-06-1897 | :- அமெரிக்காவில் முதன் முதலாக கொடிநாள் அனுஷ்டிக்கப்பட்டது. |
| 15-06-1505 | :- கொலம்பசினால் "மட்னிக் தீவு" கண்டுபிடிக்கப்பட்டது. |
| 16-06-1971 | :- பி.பி.சி. வானொலியை ஆரம்பித்த "ஜோர்ன் சார்ளஸ் வேல்சம்" காலமானார். |
| 19-06-1910 | :- தந்தையர் தினம் கொண்டாடும் முறை அமெரிக்காவில் ஆரம்பிக்கப்பட்டது. |
| 22-06-1812 | :- நெப்போலியன் ரஷ்யா மீது போர் தொடுத்தார். |
| 25-06-1992 | :- ஐநா பொதுசபை 20 வருட்களாக தென்னாப்பிரிக்காமீது இருந்த தடையை நீக்கியது. |
| 27-06-1974 | :- கச்சதீவை இந்தியா இலங்கைக்கு வழங்கியது. |
| 29-06-1916 | :- முதன் முதலாக போயிங் விமானம் பறக்கவிடப்பட[illegible] |
| 30-06-1934 | :- ஒரே இரவில் ஆயிரக்கணக்கானவர்களை ஹிட[illegible] செய்தார். இதனால் இது "நீண்டவாளின் இரவு" எனப்படுகிறது. |



வானவில்லில் இல்லாத நிறம் "கறுப்பு"

## நிகழ்வு-01

# வந்த பெரியோரை வரவேற்போம்!


"தங்கத் தமிழெடுத்து சிந்தை உளம் மகிழ வந்தபெரியோரை வரவேற் -போம்..." என்று அழகிய பாடலுக்கு நடனமாடி எமை வரவேற்றனர் வ/கல்மடு படிவம் - I அ.த.க. பாட சாலை மாணவிகள்.

கடந்த மாதம் 4ம் திகதி புதன்கிழமை காலை அப பாடசா -லையில் இடம்பெற்ற புதிய வகுப் -பறை மாடிக்கட்டிடமும், விஞ்ஞான ஆய்வுக் கூடமும் திறப்பு விழாவின் போது இடம்பெற்ற சம்பவத்தைத் தான் கூறுகிறோம்.

அரச அதிபர், வலயக் கல்விப் பணிப்பாளர், அரசியல் துறை உறுப்பினர்கள், நிகோட் நிறுவன அதி காரிகள் என முக்கிய வி.ஐ.பிக்கள் பலரோடு கூட்டத்தோடு கூட்டமாக நாமும் நிகழ்விற்கு ஆஜராகி யிருந்தோம்.

மங்கள விளக்கேற்றல், நாடாவெட்டல் போன்ற வழமையான அம்சங்களோடு நிகழ்வு ஆரம்பித்து, அருகிலிருந்த நீண்ட ஓலைக் கொட்டிலில் அதிபர் தலைமையில் கூட்டம் ஆரம்பமானது.

அப்போதுதான் மேற்படி மாணவிகளின் நடனமும் இடம் பெற்றது. அதிபர் தனது உரையில் தாம் கடந்துவந்த பாதையில் ஏற்பட்ட கஷ்டங்களையும், இன்னல்களையும் உணர்வுபூர்வமாகவும், நகைச் சுவையாகவும் எடுத்துக்கூறினார்.



தொடர்ந்து பேசிய பழைய மாணவர் ஒருவா ''நீண்ட காலமாக எமது பாட சாலையில் "குரு குலக்கல்வி முறையே இருந்தது" என்றார்.

வலய கல்விப் பணிப்பாளர் திரு. சி.தண்டாயுதபாணி அவர்கள் விரல்நுனியில் தரவுகளை வைத்துக்கொண்டு சுவாரசியமாகவும்,



ஆணித்தரமாகவும் பேசினார். "வேறெந்தப் பாடசாலையிலும் இல்லாத அளவிற்கு பாடசாலைக்கும், பாடசாலைச் சமூகத்திற்கும் இடையிலான உறவு இங்கு வலுவாக இருக்கிறது என்று புகழாரம் சூட்டிய வலயக் கல்விப் பணிப்பாளர், பாடசாலைச் சமூகம் பாடசாலைக்கு என்ன செய் யப் போகிறது?" என்று கேள்வியும் எழுப்பினார்.

கூட்டம் நிறைவு பெற்று, மதிய விருந்துக்கு அழைத்தார்கள. எமக்கோ வெளியே பல முக்கியவேலைகள் இருந்தன. "சேர் கொஞ்சம் அவசரமாகப் போகவேணும்....." என்று நாம் இழுக்க.... போதென்றால் ஏன் சொல்கிறீர்கள்? பேசாமல் போகவேண்டியதுதானே!" என்று அதிபர் திரு. க.செல்வதேவன் செல்லமாக எம்மீது கோபிக்க, அந்த அன்புக் கட்டளைக்கு இணங்க மதிய விருந்தில் கலந்து கொண்டோம். சுவையான விருந்து தந்து அசத்திவிட்டார்கள் போங்கள்! இனிய ஒரு நிகழ்வில் கலந்து கொண்ட திருப்தியோடு அலுவலகம் திரும்பினோம்.



மோனலிசா ஓவியம் இடதுகையால் வரையப்பட்டதாகும்.

# வெற்றியை நோக்கி




வீ.வீ.

## "வறுமைக்குப் பயந்தவன் வாழ்வதில்லை"

**வ**றுமை ஒன்றும் கொடியது இல்லை! அதனை நாம் எவ்வாறு எடுத்துக்கொள்கிறோம் என்பதில உள்ளது. வறுமையிலும் ஒரு அழகு உண்டு! பொலிவு உண்டு! மகிழ்ச்சி, அமைதி, நிம்மதி நிலவுகிறது. ஒவ்வொரு நாளும் வறுமையை நினைத்து அதை வெல்லப்போராடி முன்னேறும் பக்குவம் இருக்கிறதே, அதுதான் வாழ்க்கை.

வறுமை எப்போது அசிங்கமடைகிறது என்றால், அதனைச்சாட்டாக வைத்து உழைக்காது, படிக்காது, தீய பழக்க வழக்கங்களில் இறங்கி எம்மை நாம் அழித்துக் கொள்ளும் போதுதான். வறுமைக்குப் பயந்தவன் வாழ்வதில்லை! வறுமையை, பசியைக் காணாதவன் முன்னேறியதில்லை.



குப்பிவிளக்கிலும், பழஞ் சோற்றிலும் வாழ்க்கையை இழுத்த வர்கள்தான் இன்று உயர் பதவிகளை அலங்கரித்துள்ளனர். பல்கலைக் கழகங்களிலும், அரசநிர்வாகத் துறைகளிலும், நிதிநிறுவனங்களிலும் உழைப்பவர்களின் ரிஷிமூலங்கள், நதிமூலங்களைச் சற்று ஆராய்ந்து பாருங்கள் உண்மை புலப்படும். பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், உங்கள் ஆசிரியர்கள், ஏன் இப்போது உங்கள் அருகில் நின்று கொண்டிருப்பவர்கள் எல்லோருமே வறுமை என்ற எலலைக் கோட்டைத் தாண்டி வெற்றிபெற்றவர்களே!

1995 இடப்பெயர்வு உங்களுக்குத் தந்த துன்பங்களை மறந்திருக்க மாட்டீர்கள். அந்த வேளையிலும் படித்து வெற்றிபெற்ற மாணவர்கள் எத்தனைபேர் தெரியுமா? அகதி முகாம்களில் எத்தனையோ இடர்களின் மத்தியிலும், குண்டு வீச்சுக்களின் மத்தியிலும் படிப்பைத் தொடர்ந்து வெற்றிபெற்ற வரலாறு எம்முடையது.

இதே இடப்பெயர்வின் போது கிளாலிக் கடல் நீரேரியில் படகில் வந்தபோது இடம்பெற்ற விமானக்குண்டுவீச்சின் போது தனது தந்தையையும், சகோதரனையும் கண் முன்னே பறிகொடுத்து அடுத்து வந்த G.C.E (O/L) பரீட்சையில் 8D பெற்ற மாணவிபோல் எத்தனையோ மாணவர்கள் தடைகளை, உக்கிரங்களைத் தோற்கடித்து வெற்றி பெற்றுள்ளனர்.

இவர்களது வாழ்க்கை எமக்கு நல்லதொரு உதாரணம். நீங்கள் எல்லாவசதிகளையும் கொண்டவர்கள், ஆளுமை மிக்கவர்கள், திறமைசாலிகள்! உங்களிடம் குடிகொண்டுள்ள ஆக்க சக்தியினை வெளிக்கொண்டு வாருங்கள். விரைவில் முன்னேறி விடுவீர்கள்! உங்கள் வறுமை உங்களுக்கு ஒரு தடையல்ல, ஏணிப்படி! அது உள்ளபோதே ஏறிவிடுங்கள்!



தேனிக்கு ஐந்து கண்கள் உள்ளன.

# மாதம் ஒரு பாடசாலை

## 'வன்னி நின்றுயர் தாரகை"
## மு/வித்தியானந்தாக் கல்லூரி, முள்ளியவளை.

"'எக்ஸ்சியூஸ் மீ சேர்"

"யேஸ்"

"அதிபரை ஒருக்கா மீற் பண்ண வேணும்"

"அவர்வெளில போயிற்றார் நீங்க?"

"நாங்க ஒரு மகஸீன் விசயமா அவரை சந்திக்க வேணும்"


"என்ன விசயம் என்னட்ட சொல்லுங்க"

"இல்ல சேர் அதிபரிட்டத்தான் பொமிசன் எடுக்கவேணும்"

"நான் தான் அதிபர் இப்ப சொல்லுங்கோ!"

ஒரு ஞாயிற்றுக்கிழமை மாலை வேளையில் வித்தியானந்தாக் கல்லூரியின் பின்புறம் நிற்கும் மாமரத்தின் கீழ் அமர்ந்திருந்த அதிபருக்கும் எமக்கும் இடையே நடந்த உரையாடல்தான் இது!

தானே அதிபர் என்பதைக் காட்டிக் கொள்ளாமல், எம்மோடு உரையாடிய அதிபரின் எளிமை எம்மை மிகவும் கவர்ந்தது. வந்த



அதிபர்

விடயத்தைச் சொன்னோம். "திங்கள், வெள்ளி தவிர்ந்த ஏனைய நாட்களில் வாருங்கள்" என்றார்.

எந்த வெள்ளிக்கிழமை வரவேண்டாம் என்று சொன்னாரோ அதே வெள்ளிக்கிழமை மறுபடியும் போய்நின்றோம். (நமக்குத்தான் எதற்குமே நேரம்கிடைப்பதில்லையே!)

மேசைமுழுவதிலும் நிறைந்து கிடந்த Fileகளை ஆராய்ந்து கொண்டிருந்தார். அதபிர் திரு.K.P.கணேஷ் அவர்கள் எம்மோடு பேசமுடியாத அளவுக்கு அவருக்கு வேலைகள் இருந்தன. அந்த வருத்தத்தை முகத்தில் காட்டியவாறு உபஅதிபரோடு



ஓணானால் ஒரே பார்வையில் இரு காட்சிகளைக் காண முடியும்.



எமது ஓவியரின் தூரிகையில் பாடசாலையின் முதல் அதிபர் உயர்திரு. A.F.K. ஞானப்பிரகாசம்

பேசுமாறு கேட்டுக் கொண்டார்.

உபஅதிபர் தந்த பொன் விழா மலரில் இருந்து பாடசாலையின்வரலாற்றை உருவினோம்.

1951ம் ஆண்டு வித்தியானந்தாக் கல்லூரி ஆரம்பிப்பதற்கு முன்பு முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆங்கிலக்கல்வி போதிக்க எந்தவொரு நிறுவனமும் இருக்கவில்லை. இக்குறைபாட்டை நீக்க அக்கால பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ பேராசிரியர் செ.சுந்தரலிங்கம் முயற்சிகளை மேற்கொண்டார். விளைவு? 1951ம் ஆண்டு ஜனவரி 17ம் திகதி காலை 9.00 மணிக்கு எதுவித ஆடம்பரமும் இன்றி உதயமானது மு/வித்தியானந்தாக் கல்லூரி.

பாடசாலையின் முதல் அதிபர் திரு. A.F.K. ஞானப்பிரகாசம் அவர்களுடன் 3 உதவி ஆசிரியர்களும், 235 மாணவர்களுமே ஆரம்பத்தில் இருந்தனர்.

4ம் ஆண்டு தொடக்கம் S.S.C (தற்போதைய O/L) வரை வகுப்புக்கள் நடந்தன. அடுத்தமாதம் பாடசாலைக்கு ஆங்கில ஆசிரியராக திரு. மு.தியாகராசா நியமனம் பெற்று வருகிறார். அனைத்துப் பாடங்களும் சிறப்பாகப் போதிக்கப்படுகின்றன. "எமது பிரதேசத்தில் இப்படியொரு பாடசாலையா?" என ஊர் மக்கள் வியப்பும், மகிழ்ச்சியும் அடைகிறார்கள். 01.06.1954இல் **வித்தியானந்தாக் கல்லூரி முள்ளியவளை** என்று பெயர் சூட்டப்படுகிறது. ஆயினும் ஊர் மக்களால் அது "இங்கிலீஸ் பள்ளிக்கூடம்" என்றே அழைக்கப்பட்டது.

அதிபர் திரு.A.F.K. ஞானப்பிரகாசம் அவர்களின் அயராத முயற்சியினால் பாடசாலை வளர்கிறது. நூல்நிலையம், தொழிற்கூடம், விஞ்ஞானக் கல்வி, சீருடை என மெல்ல மெல்ல வசதிகள் பெருகுகின்றன. வித்தியானந்தாவின் விஞ்ஞானக் கல்விக்கு தனிவரலாறே இருக்கிறது. இங்கு கல்வி கற்ற எத்தனையோ வைத்தியர்கள் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பணிபுரிகிறார்கள். இன்றும் பல வைத்தியர்களை உருவாக்கிக் கொண்டிருக்கிறது வித்தியானந்தா.

1967இல் பாடசாலைச் சஞ்சிகையான **"வித்தியாதீபம்"** முதன் முதலாக வெளியிடப்பட்டது.



பிறந்தது முதல் இறக்கும்வரை உறங்காத உயிரினம் "எறும்பு".

1976இல் வெள்ளிவிழா 3 நாட்கள் சிறப்பாக கொண்டாடப்பட்டது. 1995 ஜனவரி 25இல் மாபெரும் கல்விக் கண்காட்சி ஒன்றும் நடைபெற்றது.

**"வன்னி நின்றுயர் தாரகை"** என வர்ணிக்கப்படும் வித்தியானந்தாவில் கலைவளர்ச்சிக்கும் குறைவேயில்லை. நாட்டுக் கூத்துக்கள், இசைநாடகங்கள், வசன நாடகங்கள், இசை நிகழ்ச்சிகள், முத்தமிழ் விழா, வள்ளுவர் விழா, நவராத்திரி விழா, சிவராத்திரி விழா, பரிசளிப்பு விழா, பழைய மாணவர் விழா என எப்போதுமே ஏதாவது ஒரு விழா நடைபெற்றுக்கொண்டிருக்குமாம்.

"பெட்டிசன் போடுவேன்", பண்டாரவன்னியன்'', நீதிக் கொருவன்", "அடிமையோலை", ''கவரிவீசியகாலன்'', ''வரப் பிரசாதம்" போன்ற பல நாடகங் களும் இங்கே அரங்கேற்றப்பட்ட னவாம்.

விளையாட்டுத்துறையிலும் வித்தியானந்தாக்காரர்கள் வீரர்கள். 1992, 1993, 1994, 1997, 1998 காலப்பகுதிகளில் முல்லைத்தீவு மாவட்டத்தில் நடைபெற்ற மெய்வன்மைப் போட்டிகளில் அதிகசுூடிய புள்ளிகள் பெற்று முதலிடம் பெற்றிருக்கிறார்கள்.

சரி, பாடசாலையின் தற்போதைய நிலை என்ன? உப அதிபர் திரு.S.உதயகுமார் அவர்கள் விபரிக்கிறார். ''எங்கட பிள்ளையளின்ர கல்வி வளர்ச்சி எப்பவுமே சிறப்பாகத்தான் இருக்கு, எந்தவொரு கஷ்டமான சூழ்நிலையிலும் யாரும் படிப்பைக் கைவிட்டதில்லை. ஆனால் வளப்பற்றாக்குறைகள் இருக்கி ன்றன".

இக்குறைகள் யாவும் வெகுவிரைவில் நீங்கி, கல்வியைப் போலவே அனைத்துத் துறைகளிலும், "வன்னி நின்றுயர் தாரகை வித்தியானந்தா" பிரகாசிக்க வேண்டும்! அவர்களது "பொன் விழா" மலரில் ஆங்கில ஆசிரியர் திரு. K.குகன் தனது ஆங்கிலக் கவிதையொன்றில் சொல்லியுள்ளது போல "வித்தியானந்தாவின் கல்விப் பொக்கிஷம்" (You are in fortune, because, a treasure trove you have) அனைவருக்கும் பயன்பட வேண்டும் என்பதே "பூங்கனி"யின் விருப்ப மாகும்.

**– ஹரீஸ்**

*அடுத்த பூங்கனியில்*

*மாதம் ஒரு பாடசாலையாக மன்னார் மாவட்டத்திலிருந்து ஒரு பாடசாலை தெரிவாகியுள்ளது. அது எது? அடுத்தமாதம்வரை பொறுத்திருங்கள்.*

**ஓடிஓடிப் படிக்கணும்...**

இப்போ ஒரு வங்கிச் சமாச்சாரம். உலகில் முதன்முதலாக வங்கி உருவாக்கப்பட்ட இடம் – இத்தாலி. என்பது உங்கள் பதிலாக இருந்தால் 26ம் பக்கத்திற்கும், அமெரிக்கா என்றால் 55ம் பக்கத்திற்கும் நடையைக் கட்டுங்கள்...



முயல்களுக்கு முன்கால்களைவிட பின்கால்கள் நீளமானது.

# நிகழ்வு-02



## வெளிவந்தது "மனசு"

இசையமைப்பாளரும், எழுத்தாளருமாகிய சோமரட்ணம் ஜெயச்சந்திரன் எழுதிய 'மனசு' குறுநாவல் வெளியீட்டு விழா கடந்த 16-05-2005 திங்கட்கிழமை, மாலை 4.00 மணிக்கு வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் சங்க கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

திரு. கே.ஆர்.றஜீவனின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், தமிழ் வணக்கப்பாடலை செல்வி உஷேனி ஸ்ரீதரனும், வரவேற்புரையினை செல்வி ஜெ.சுபாசினியும், அறிமுகவுரையினை திரு.க.கோகுலதாஸும், வெளியீட்டுரையினை திரு. கந்தையா ஸ்ரீகணேசனும், நயவுரையினை தமிழருவி சிவகுமாரனும், நன்றியுரையினை திரு.மகாமுனி சுப்பிரமணியமும் வழங்கினர்.

தமிழ்மணி அகளங்கன் நூலினை வெளியிட்டு வைக்க முதற்பிரதியினை திரு.மு.திலீபன் பெற்றுக்கொண்டார்.

எளிமையாகவும், சிறப்பாகவும் இடம்பெற்ற இந்நிகழ்வில் இலக்கிய ஆர்வலர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் என பெருந்தொகையானோர் கலந்துகொண்டனர்.


தொடர்புகட்கு :

இல. 178/5-B, முதலாம் ஒழுங்கை,
குட்செட் வீதி, வவுனியா. தொ.பே : 077 - 6054422




உஷேனி



சுபாசினி



கோகுலதாஸ்




கந்தையா ஸ்ரீகணேசன்



மகாமுனி சுப்பு



தமிழருவி
த.சிவகுமாரன்



தமிழ்மணி அகளங்கனிடமிருந்து
முதற்பிரதி பெறும் திலீபன்




உலகிலேயே அதிகமான பூக்கள் நெதர்லாந்தில் மலர்கின்றன.

# வன்னியின் கதை

# 3



மாவீரன்
பண்டாரவன்னியன்



**முல்லைமணி எழுதுகிறார்....**



இத்தாலி நாடு படகுவடிவில் அமைந்துள்ள ஒரு அதிசய நாடாகும்.

# வன்னி

யாழ்ப்பாணத்தில் ஆரியச் சக்கரவர்த்திகள் பரராசசேகரன், செகராசசேகரன் என மாறி மாறிச் சிம்மாசனப் பெயர்களுடன் ஆட்சி புரிந்தனர். யாழ்ப்பாண அரசு தோற்றம் பெறுவதற்கு முன்பே வன்னி அரசுகள் தோற்றம் பெற்றுவிட்டன.

ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தில் ஏழு வன்னிப் பற்றுகள் இருந்தன. அவையாவன: **செட்டிகுளம், பனங்காமம், மேற்பற்று, கருநாவல்பற்று, முள்ளியவளை, கரிக்கட்டு மூலை, தென்னமரவாடி.**

வன்னிப் பிரதேசம் யாழ்ப்பாண இராச்சியத்தைச் சேர்ந்தது என யாழ்ப்பாண அரசர்கள் உரிமை கொண்டாடினர். யாழ்ப்பாண அரசர்கள் வலிமையுற்றிருக்கும்போது வன்னியர் அவர்களுக்குத் திறை செலுத்தினர். எனினும் வன்னியர் ஒழுங்காகத் திறை செலுத்துவதில்லை. யாழ்ப்பாண மன்னன் வலிமையற்றிருக்கும் போது வன்னியர் திறை செலுத்துவதை நிறுத்திவிடுவர்.



பதினைந்தாம் நூற்றாண்டில் கனகசூரியசிங்கை ஆரியனின் மகனான பரராசசேரகன் வன்னியரை அடிமைப் படுத்தினான். தன் ஆட்சிக்காலத்தின் இறுதியில் முள்ளியவளையில் கோட்டை அமைத்து சிறிதுகாலம் ஆட்சி செலுத் தினான்.

யாழ்ப்பாண அரசர்கள் வன்னியரை நிர்வாக அதிகாரிகளாகவே கருதினர். எனினும் தலைமுறை தலைமுறையாக தம் நாடுகளை வன்னியர்களே ஆண்டுவந்தனர். வன்னியர் தமக்குக் கீழுள்ள முதலியார், கண்காணி, பண்டாரப்பிள்ளை, தலையாரி, மொத்தக்கர் முதலிய எல்லா அதிகாரிகளையும் நியமித்து வந்தனர். அத்துடன் வாரம், தீர்வை, காணிக்கடன், ஆள்வரி முதலிய எல்லா இறைவரிகளையும் வன்னியரே பெற்றனர்.

கண்காணி என்பவர் நிலங்களை அளவிதல், வரிமதிப்பீடு முதலிய கடமைகளைச் செய்தனர். பணிக்கர் யானைகளைப் பிடித்துப் பழக்கினார். மொத்தக்கர் பணிக்கர்களின் அதிபதியாக இரந்தார். தலையார்




இந்தத் தகவலைக் கேட்டு அருவருக்காதீர்கள். உலகில் குறிப்பிட்ட நாட்டு மக்கள் வெட்டுக்கிளியைப் பிடித்து சமைத்துச் சாப்பிடுவார்கள். அவாகள் யார். சீனர்கள என்று சொல்பவர்கள் 56ம் பக்கத்திற்கும், எங்களுக்குத் தெரியவே தெரியாது என்பவர்கள் 31ம் பக்கத்திற்கும் வருக.



உலகிலேயே துணியில் செய்தித்தாள் வெளியிடும் நாடு ஸ்பெயின்



ஊர்த்தலைவராவார். பண்டாரப்பிள்ளை, வரியறவிடுவதற்குப் பொறுப்பான உத்தியோகத்தராவர். யாழ்ப்பாண ஆட்சியாளர்கள் எக்காலத்திலும் வன்னியின் நேரடி நிர்வாகத்தை நடத்தவில்லை.

யாழ்ப்பாணத்தில் அரண்மனையில் வருடத்துக்கு இருமுறை வரிசைகள் கூடியபோது வன்னியர் உபகாரம் அனுப்ப வேண்டும் என ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆண்டுக்கு ஒருமுறை யாழ்ப்பாணம் சென்று வரிகொடுக்க வேண்டும் என்றும் ஏற்பாடு இருந்தது. இவற்றை வன்னித்தலைவர்கள் ஒழுங்காகச் செய்வதில்லை. வரோதைய சிங்கையாரியன் முதலாம் சங்கிலி போன்ற பலம்மிக்க மன்னர்களே வன்னித்தலைவர்களிடம் திறை பெறமுடிந்தது.

போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி ஆட்சி செலுத்திய காலத்தில் வன்னியரிடமிருந்து திறைபெறும் உரிமையை நிலைநாட்ட முனைந்தனர். எனினும் வன்னியில் போர்த்துக்கேயர் தமது ஆதிக்கத்தைப் பெருமளவு ஏற்படுத்த முடியவில்லை.

மன்னாரைக் கைப்பற்றி செட்டிகுள வன்னிப்பற்றை மாத்திரம் தமது ஆணைக்குக் கீழ்கொண்டுவரமுடிந்தது. ஏனைய வன்னிப் பற்றுக்கள் ஓரளவு சுதந்திரமாகவே இயங்கின.


போர்த்துக்கேயர் முப்பத்தெட்டு ஆண்டுகளே யாழ்ப்பாண ஆட்சியாளர்களாக இருந்தனர். இதனால் வன்னிப் பற்றுக்களில் பெருமளவு தாக்கத்தை ஏற்படுத்த முடியவில்லை. வன்னித்தலைவர்கள் தமக்குக் கப்பஞ் செலுத்தவேண்டும் என வலியுறுத்தினர். எனினும் பெரும்பாலான வன்னியர்கள் கப்பம் செலுத்துவதைத் தவிர்த்தனர்.




சரி சரி ஓடியதுபோதும் நிறுத்துங்கள். அந்த நூலை எழுதியவர் லியோடால்ஸ்டாய்தான். சரியான விடையைக் கண்டுபிடித்த உங்களுக்கு ஒரு போனஸ் தகவல். இலங்கையில் 1963 மே 1ம் திகதி கிராமசேவகர் முறை உருவாக்கப்பட்டது. சரி இப்போ 10ம் பக்கம் போங்க....



தமிழகத்தில் துளசிப்பட்டிணம் என்னும் இடத்தில் ஔவையாருக்கு கோவில் உண்டு.



பனங்காமப் பற்றின் அதிபதியான கயிலைவன்னியன் தொடர்ச்சியாக பன்னிரண்டு அல்லது பதினான்கு ஆண்டுகள் போர்த்துக்கீச தேசாதிபதியின் தர்பாருக்குப் போகவில்லை.

பனங்காமம் அடங்காப்பற்று, வன்னிப் பிரதேசத்தில் அரைவாசிக்கு மேற்பட்ட பிரதேசத்தை உள்ளடக்கியது. இப்பரதேசம் மிகவும் செல்வவளமுடையது. பனங்காமப் பற்றின் தலைவன் ஏனைய வன்னிப் பற்றுக்களின் தலைவர்களை விட முக்கிய இடத்தைப் பெறுகிறான்.

**-கதை இன்னும் நீளும்**



# நான்

எனது பெயர் தங்கராசா சுஜித்தா. நான் வ/நெடுங்கேணி மகாவித்தியாலயத்தில் தரம் - 09Bயில் கல்வி கற்கிறேன். எனது வயது 14. எனது எதிர்கால இலட்சியம் ஒரு சிறந்த வைத்தியராக வருவதாகும்.

நான் சிறந்த வைத்தியரானால். எனது கடமைகளை பாகுபாடின்றி நேர்த்தியாக செய்வேன். நோயாளர் அனைவரையும் அன்புடன் பராமரித்து அவர்களது நோய்களை நன்றாக குணப்படுத்துவேன்.

எனது முதல் நடவடிக்கையாக நோய்களென்றால் என்ன? அவை எப்படி பரவுகின்றன? என்பதை மக்களுக்கு விளக்கிக் கூறுவேன். எப்பொழுதும் மக்கள் தொண்டே எமது தொண்டென எண்ணி வாழ்வேன்.

த.சுஜித்தா
தரம்-9B
வ/நெடுங்கேணி மகாவித்தியாலயம்
நெடுங்கேணி

**மேமாத பூங்கனியில் கேட்கப்பட்டிருந்த "யார் இவர்?" பகுதிக்கான விடைகள்.**


| பக்கம் | விடை |
|---|---|
| 3 | ஆபிரகாம் லிங்கன் |
| 5 | சார்ளி சாப்ளின் |
| 17 | பரிதிமாற் கலைஞர் |
| 20 | ரவீந்திரநாத் தாகூர் |
| 31 | வ.வே.சு.ஐயர் |






கட்டார் நாட்டில் பெண்கள் கார்ஓட்ட அனுமதியில்லை.

# வண்ணத்துப்பூச்சி.... வண்ணத்துப்பூச்சி.... பறக்குமா?



வண்ணத்துப் பூச்சிகளில் சுமார் 10,000 இனங்கள் உள்ளன. ஒவ்வோர் இன வண்ணத்துப்பூச்சியும் அதன் இனத்திற்கென்று உள்ள ஒரு செடியின் இலையில் தான் முட்டையிடும். ஒரு வண்ணத்துப்பூச்சி மற்ற இன வண்ணத்துப்பூச்சியின் செடியில் முட்டையிடாது.

அமெரிக்காவில் "நாய்த்தலை வண்ணத்துப்பூச்சி" என்று ஓர் இனம் இருக்கின்றது. இதன் முன்பக்கத்து இறக்கைகளில் நாயின் தலைபோன்ற உருவங்கள் இருக்கின்றன.

''மோனார்க்'' என்னும் வண்ணத்துப் பூச்சிகள், ஆண்டுதோறும் கிழக்குக் கனடாவிலிருந்து தெற்கு மெக்ஸிகோவுக்குச் சுமார் 3200 கி.மீ தூரம் பறக்கின்றன. சராசரியாக மணிக்கு 18 கி.மீ தூரம் பறக்கின்றன. காற்று பலமாக வீசாவிட்டால் எங்கேயும் உட்காராமல் தொடர்ந்தாற்போல் 1040 கி.மீ தூரத்தைக் கூட கடக்கின்றன.

உலகில் மிகவும் பெரிய வண்ணத்துப்பூச்சி ''பறவைச்சிறகு வண்ணத்துப்பூச்சி''தான். இரண்டு சிறகுகளையும் விரித்தால் 31 செ.மீ இருக்கும். இவ்வண்ணத்துப்பூச்சி பறக்கும்போது ஒரு பறவை பறப்பது போல இருக்கும்.

மிகவும் சிறியது ''பிக்மி வண்ணத்துப்பூச்சி ஆகும். இது 1 செ.மீ தான் இருக்கும்.

வண்ணத்தப்பூச்சிகள் அழகாகப் பூக்கள் மாதிரி இருக்கின்றன அல்லவா? ஆனால் ஆசிய நாடுகளில் ''இலைச்சருகு



துருக்கி-இஸ்தான்புல் நகரில் மட்டும் 450 மசூதிகள் உள்ளனவாம்.

வண்ணத்துப்பூச்சி" என்று ஓர் இனம் இருக்கின்றது. இந்த வண்ணத்துப்பூச்சி காய்ந்த இலைச் சருகு மாதிரியே இருக்கும். இது செடியில் உட்காாந்திருந்தால் தெரியாது.



வண்ணத்துப்பூச்சி யாவதற்கு முன் உள்ள கம்பளிப்பூச்சி, தன் மிகக் குறைந்த வாழ்நாளில் தன் உடல் அளவைப் போல் 50,00 மடங்கு இலைகளை அரித்து தின்றுவிடும்.

ஒரு பெண் வண்ணத்துப்பூச்சி (அதன் முட்டைகளில் ஏதும் அழியாமல் இருந்தால்) மூன்று ஆண்டுகளில் சுமார் 100 கோடி வண்ணத்துப் பூச்சிகளைத் தோற்றுவிக்கும்.

~ சு.கௌரீஷன்.

## டொக்டர் ஸ்பீக்கிங்



தற்போது வெயில் அதிகம். தற்போது உள்ள பொது நோய் மூலநோய். இதற்குரிய ஒரு சிறிய மருந்து எள்ளு, சுக்கு, கமுகு, திற்பிலி, சமனாக எடுத்து பொடியாக்கி தேனுடன் கலந்து காலை, மாலை சிறிது உண்ண மூலநோய் தீரும்.

கார், எள்ளு, சுக்கு, கமுகு, திற்பலி
நேர் ஒக்கக்கூட்டி நிதம் தேனில்
உண்டிட
ஊர் ஒக்க கெடுத்து உண்டவன்
சுற்றம் போல்
வேர் ஒக்க கெடும் மூலவியாதியே.

வைத்தியர்
ப.சத்தியநாதன்



பூங்கனி ஜூலை மாத இதழில்

உங்கள் அபிமான

**குறும்புக் குமரன்**

வழங்கும்

**"அ முதல் ஃ தானடா"**







சீனர்கள் 10 ஆண்டுகளுக்கு ஒருமுறையே தமது பிறந்தநாளைக் கொண்டாடுவார்கள்.

# சிரிச்சுத்தான் பாருங்களேன்



"படிச்சு நல்ல பெயர் வாங்கணும்"
"ஏன்? குமார்ங்கற பெயர் நல்லாத்தானே இருக்கு"

த.கமலரூபன்
தரம்-6B
வ/த.ம.ம.வி



"ஐயா, எனக்கு கடனுக்குப் பொருள் தாங்க"
"உன்ன முன்ன பின்ன பார்த்ததே இல்லையே"
முன்னுக்கும் பின்னுக்கும் திரும்பிக் காட்டுறேன்.... தாறீங்களா....?

ப. சுபத்திரா
தரம்-7B
வீரபுரம் மணிவாசகர் ம.வி



"நம்ம முதலாளிகிட்ட தீபாவளிக்கு போனஸ் (Bonus) தாங்கண்ணு கேட்டது தப்பாப் போச்சு"
ஏன்?
"இறைச்சிக் கடைக்குப் போய் எலும்பு வாங்கிட்டு வந்திட்டாரு"

S.சிந்துர்க்கா
தரம்-5E
வ/இறம்பைக்குளம் ம.ம.வி



"வாத்தியார் அந்தப் பையனை ஏன் அடிக்கிறாரு?"
"நாய் நன்றியுள்ள பிராணி!, கோழி சுவையுள்ள பிராணி! என்று எழுதினானாம்."

கெ.பிரசன்னா
தரம்-8B
மு/யோகபுரம் ம.வி. மல்லாவி



"இலை போட்டாச்சு எல்லாரும் சாப்பிட வாங்க"
"சாரி சார்.... நாங்க இலையெல்லாம் சாப்பிடுறதில்லை."

இ.சாமுவேல்
தரம்-9B
வ/விபுலானந்தாக் கல்லூரி



பைபிளைத் தமிழில் மொழிபெயர்த்தவர் சீகன்பால்கு

# தமிழுக்கில்லை தட்டுப்பாடு

## "அம்மா அழுப்பு தாங்கோ"

"அம்மா அம்மா பசிக்குது அழுப்புத் தாங்கோ"
பாடசாலைவிட்டு வந்த சீலன் தன் தயாரிடம் கேட்டான்

"என்னது... அழுப்போ அப்படியெண்டா?
எதுவுமே புரியாமல் கேட்டார் சீலனின் தாயார்.

"அது சரியம்மா, அக்கனும், அக்கிரசனும் இன்னும் வரேலையா?"

"சீலன்... சும்மா என்னோட விளையாடதே எனக்குத் தலை சுத்துது..."

"என்னம்மா.... இதுகூடத் தெரியாதா?" "அழுப்பு என்றால் சோறு"

"என்னது சோறா? எந்த மொழியில"

"நல்லாக் கேட்டீங்க, எங்க தமிழ்மொழியிலதான்"

"அப்ப அக்கன், அக்கிரசன்?"

"அதுவும் தமிழ்தான் அக்கன் என்றால் அக்கா, அக்கிரசன் என்றால் அண்ணா"

"தம்பி மோனே! எனக்கு ஒண்டுமே விளங்கேல என்னைவிடு ராசா, அந்தா உன்ர அக்கன் வாறாள் அவளோட கதை உன்ர தமிழை"

சீலனின் தாயார் மெல்ல நழுவி சமையலறைக்குள் நுழையவும், பாடசாலை விட்டு சீலனின் தமக்கை வீட்டுக்கு வரவும் சரியாக இருந்தது.

தன் தமக்கையைக் கண்ட சீலன்

"அம்மா துன்பம் வந்திட்டுது"

என்று கூற

"இஞ்ச பாருங்கோ அம்மா தம்பியை, என்னை துன்பமாம்"

"ஏன் அப்படி சொல்றதில என்ன பிழை"?

மீண்டும் சீலன் கேட்க

"சீலன்.... எனக்கு விசரக் கிளப்பாதை, வெயிலுக்கிளால வந்து ஒரே தலையிடியா இருக்கு"

"சரியக்கா கோபிக்காதே.... உன்ர பெயரைச் சொல்லு"

"என்னடா நடந்தது உனக்கு? ஏன் என்ர பேர் தெரியாதே?"

"அதில்லையக்கா, உன்ர பேர் ஆர்த்திதானே. ஆர்த்தி என்றால் துன்பம் எண்டு அர்த்தம்."



தொல்காப்பியம் 1275 பாடல்களைக் கொண்டது.

"அர்த்தமெல்லாம் சரிதான், அதுசரி உனக்கு எப்படி இதெல்லாம் தெரியும்?"

"இண்டைக்கு எங்கட பள்ளிக்கூடத்துக்கு புதுசா ஒரு தமிழ் ஆசிரியர் வந்தவர், அவர்தான் சொல்லித் தந்தவர்"

"சரி சீலன் எனக்கு ஒரே தாகமா இருக்கு, நான் அம்புலாசினி கரைக்கப்போறன், உனக்கு வேணுமா?"





என்று ஆர்த்தி கூற,

"என்னது அம்புலாசினியோ, அப்படியெண்டா?"


"அம்புலாசினி எண்டா தேசிக்காய், உனக்கு மட்டும்தான் தூயதமிழ் தெரியுமா? எனக்கும் தெரியும், எனக்கும் புதுசா வந்த சேர்தான் சொல்லித்தந்தவர்"

ஒருநாள் மதியவேளையில் சீலன் வீட்டில் நடந்த ஒரு சிறிய சம்பவம்தான் மேலேயுள்ளது.

சரி அவர்கள் பேசிக்கொண்டது போல தூய தமிழில் நாம் பேசினால் யாருக்காவது விளங்குமா? என்று நீங்கள் கேட்கலாம்.

நமது அன்றாட வாழ்க்கையில் இவ்வாறு தூய தமிழ்ச் சொற்களைப் பாவித்துக் கதைப்பது சற்றே சிரமம்தான். இருப்பினும் நமது தமிழ் மொழியிலுள்ள எத்தனையோ இலட்சக்கணக்கான சொற்களில் எத்தனை சொற்களை நாம் அறிந்து வைத்திருக்கிறோம்?

ஒரு தமிழ் அகராதியை எடுத்துப் பார்த்தால் நமக்குத் தெரியாத எத்தனையோ சொற்கள் இருப்பதைக் காணலாம். அற்றில் சிலவற்றை இம் முறை தருகிறோம். தெரிந்து வைத்துக் கொள்ளுங்களேன்.



"பாம்பென்றால் படையும் நடுங்கும்" என்பது பழமொழி. **"அகடூரி என்றால் படையும் நடுங்குமா?"** ஏனெனில் **அகடூரி** என்றால் பாம்பு. இன்னும் **சுகாயு, அங்கதம், அநுக்கம், ககோதரம், பணாகரம்** இவையெல்லாம் திருவாளர் பாம்பின் மறு பெயர்கள். **"அசுழம் மனிதனுக்குத் தோழன்"** என்கிறேன் நான். புரிகறதுதானே **அசுழம்** என்றால் நாய். **அதிகடம்** தெரியுமா? - யானை, **அயவனம்** - ஒட்டகம், **அருச்சுனி** - பசு.

இப்படிப் பல சொற்களை உங்களுக்கு அறிமுகப் படுத்தவுள்ளோம். எதிர்பாருங்கள்.




ஐயையோ.... முதல் கேள்விக்கே பிழையாக சொல்லவிட்டீர்கள். அதனால் உங்கள் தலையில் ஒரு குட்டு. சரி சரி கவலைப்படாம 10ம் பக்கம் திரும்பிப் போங்க....



ஒட்டகச்சிவிங்கி திரும்பாமலே பின்பக்கம் பார்க்கக்கூடியது.

# விளையாட்டுப்பக்கம்





இனி கிரிக்கெட் மட்டையையும் நினைத்தபடியெல்லாம் உபயோகிக்க முடியாது. ஏனென்றால் இப்பொழுது அதற்கென்று ஒரு சட்டக்குழு இருக்கின்றது. இக் குழுவில் அர்ஜுண ரணதுங்கா, கவாஸ்கர், ரிம்மே, டேவிட், ரிச்சட்ஸ் ஆகியோர் சிபார்சு செய்யப்பட்டுள்ளனர்.

கிரிக்கெட் மட்டையின் பரிமாணங்கள், முறையான வடிவம், பலகை இணைப்பு, மரத்தாலான பிடி அமைப்புக்கள், நிறம் என்பன கருத்திலெடுக்கப்படும் விடயங்களாக இருக்கப்போகின்றன.

- இந்திய அணியின் புதிய பயிற்றுவிப்பாளர் கிறேக் செப்பல் (Greak Sheppal)
- இலங்கை அணியின் பயிற்றுவிப்பாளராக டொம்மோடி (Tom Mody) அண்மையில் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

## மீண்டும் வெற்றிப் பாதையில்
### "மரியன் ஜோன்ஸ்"




அமெரிக்க அதிவேக ஓட்ட வீராங்கனையான மரியன் ஜோன்ஸ், கரீபியன் தீவிலுள்ள மாரினித் நகரில் இடம்பெற்ற 100 மீற்றர் ஓட்டப் பந்தயத்தில் முதலிடம் பெற்றிருக்கிறார் 2000ம் ஆண்டு சிட்னி நகரில் நடைபெற்ற போட்டிகளில் 5 பதக்கங்கள் வென்ற இவர் 2004இல் ஏதென்ஸ் நகரில் இடம்பெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் எதுவித பதக்கங்களையும் பெறவில்லை. சிறிதுகால ஓய்வுக்குப் பின்னர் இப்போது மீண்டும் களத்தில் குதித்திருக்கிறார் மரியன்.



இன்னா நாற்பது எனும் நூலை எழுதியவர் - கபிலர்.

# முத்தையா முரளிதரன்



| | |
|---|---|
| பிறந்தது | : ஏப்ரல் 17, 1972<br>குண்டகசாலை, கண்டி |
| வயது | : 33 |
| உயரம் | : 5', 7" |
| பாடசாலை | : சென்அந்தனீஸ்கல்லூரி,<br>கட்டுகஸ்தோட்டை |
| அணி<br>கழகங்கள் | : இலங்கை, தமிழ்யூனியன்,<br>லங்காசெயார், கெனற் |
| துடுப்பாட்டம் | : Right hand bat |
| பந்துவீச்சு | : Right arm off break and others |
| Test Wicket | : 532 ODI Wicket : 360 |
| முதல்<br>பயிற்றுவிப்பாளர் | : சுனில்பெர்னாண்டோ |
| முதல் Test | : *1992-93* அவுஸ்திரேலியாவிற்கு எதிராக |
| முதல் One day | : *1993-94* இந்தியாவுக்கு எதிராக |
| Testஇல் பெறுமதி | : *67* ஓட்டங்கள்,<br>*51* ஓட்டங்கள்/*9* விக்கெட்டுகள் |

■ அளவை
கலைக்கரன்-பேராதனை



உங்கள் பாடசாலையில்
இடம்பெறும் விளையாட்டு நிகழ்வுகளை
செய்திகளாக எழுதி
அதிபரின் உறுதிப்படுத்தலோடு
எமக்கு அனுப்பிவையுங்கள்.
விளையாட்டுப் பக்கம் பகுதியில்
அவை இடம்பெறும்.



வாத்தின் முதுகில் தண்ணீர் ஒட்டாது.

# அருந்ததியின் அறிவுப் போட்டி

இல. 03



ஏப்ரல் மாத இதழில் கேட்கப்பட்ட பத்து கேள்விகளுக்குமான சரியான விடைகளோடு ஏராளமான தபாலட்டைகள் கிடைக்கப்பெற்றன. அவற்றுள் குலுக்கல் முறையில் இருவர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

**பரிசுபெறுவோர்**

① சுப்ரஜா ஜெயஆனந்தன்
தரம்-8B,
இன்பர்சிட்டி
பருத்தித்துறை.

② கு.யாழினி
(வ/சைவப்பிரகாச மகளிர் கல்லூரி)
இல. 14, மகாறம்பைக்குளம்,
வவுனியா.

**இருவருக்கும் எமது வாழ்த்துக்கள்**

ரூ. 1000 பெறுமதியான வவுச்சர்கள் இரண்டு இருவருக்கும் பரிசாக வழங்கப்படுகிறது. அவற்றைக்கொண்டு அருந்ததி சூப்பர்மார்க்கெட்டில் நீங்கள் பொருட்களை கொள்வனவு செய்யலாம்.

**சரியான விடைகள்**

1. *காசியப்பன்*
2. (OPEC) Organization petrolium Export Countries
3. *டென்னிஸ்*
4. *ஜப்பான்*
5. *பம்பரகந்த நீர்வீழ்ச்சி*
6. *ஜெனீவா*
7. *பங்குனிமாதம் 27ம் திகதி*
8. *மல்லியன் டொலர்*
9. *அறிஞர் சித்திலெவ்பை*
10. *குடியரசு கட்சி, ஜனநாயகக் கட்சி*

போட்டியில் கலந்துகொண்ட அனைவருக்கும் எமது நன்றிகள்.



ஆஸ்திரியா, அல்பேனியா, ஸ்பெயின் ஆகிய நாடுகளின் தேசியச் சின்னம் - "கழுதை".

## கேள்விகள்


1. அல்பிரட் நோபல் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?
2. உலகின் மிகப்பெரிய தீபகற்பம் எது?
3. உலகின் முதலாவது பெண் பிரதமர் யார்? ஸ்ரீமாவோ பண்டாரநா
4. சர்வதேச நெல் ஆராய்ச்சி நிலையம் எங்குள்ளது?
5. தாவரங்களின் ஒளித்தொகுப்பிற்கு உதவும் பச்சைநிறப்பொருளின் இரசாயனப் பெயர் யாது?
6. இங்கிலாந்து பாராளுமன்றத்தில் எத்தனை அங்கத்தவர்கள் அங்கம் வகிக்கின்றனர்?
7. 2004ம் சமாதானத்திற்கான நோபல் பரிசுபெற்ற பெண் "வம்காரி மார்த்தாய்" எந்த நாட்டைச் சேர்ந்தவர்?
8. இலங்கைக் கிரிக்கெட் அணியின் தற்போதைய பயிற்றுவிப்பாளர் யார்? டொம் மூடி
9. ஈராக்கின் முன்னாள் ஜனாதிபதி சதாம்உசேனின் சொந்த ஊர் யாது?
10. ஐக்கிய அமெரிக்காவின் மொத்தமாக எத்தனை மாகாணங்கள் உள்ளன?

**விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி**

**அருந்ததியின் அறிவு போட்டி-இல-03**
அருந்ததி சுப்பர் மார்க்கெட்,
361, ஹொரவபொத்தானை வீதி,
வவுனியா.


உயர் தரத்தினாலான மளிகைப் பொருட்கள், இறக்குமதி செய்யப்பட்ட உணவுவகைகள், அனைத்து வகையான ஐஸ்கிறீம் வகைகள், பேன்சிப் பொருட்கள், சொக்கலேட் வகைகள், பரிசுப் பொருட்கள், மற்றும் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான அனைத்துப் பொருட்களையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள!

**ARUNTHATHY SUPER MARKET**



அருந்ததி சுப்பர் மார்க்கெட்
இல: 361, ஹொரவப் பொத்தானை வீதி,
வவுனியா.





60 நிமிடங்கள் சுழலும் கெசட் ரேப்பின் நீளம் 565 அடிகள்.

# லூயி பாஸ்டருடன் ஒரு நேர்காணல்

## - நேர்கண்டவர் ஓவியா

லூயி பாஸ்டர் - இவரை ஒரு விஞ்ஞானி என்று உங்களுக்கு அறிமுகப்படுத்துவதைக் காட்டிலும், மனிதகுலத்தின் ஆரோக்கிய வாழ்வுக்கு வழிவகுத்த பிரதான இரட்சகர் என்றே குறிப்பிடலாம். “நோயற்றவாழ்வே குறைவற்ற செல்வம்” என்பார்கள். மனிதகுலத்தைத் தாக்கும் எத்தனையோ கொடிய நோய்களிலிருந்து குழந்தைகளை மீட்டெடுத்த பெருமைக்குரியவர் எங்கள் லூயி பாஸ்டர்.



**ஓவியா :- வணக்கம் லூயி பாஸ்டர் ஐயா அவர்களே!**

லூயி :- வணக்கம் ஓவியா.

**ஓவியா :- ஐயா, நீங்கள் மருத்துவத் துறையில் பல புரட்சிகர மாற்றங்களை ஏற்படுத்தியவர். நுண்ணுயிரியலில் பல மர்மங்களுக்கு விடைகண்டவர். உயிரியல் துறையில் தங்களுக்கு எவ்வாறு ஆர்வம் ஏற்பட்டது?**

லூயி :- நான் ஆரம்ப காலத்தில் இரசாயனவியல் துறையிலேயே ஆர்வம் கொண்டிருந்தேன். 1843இல் நான் பாரிசிலுள்ள புகழ் பெற்ற உயர்நிலைப்பள்ளியில் படிப்பைத் தொடங்கியபோது மேற்கொண்ட “துருவ ஒளி” பற்றிய ஆய்வு எனக்குப் புகழ் தேடித்தந்த ஒரு முக்கிய கண்டுபிடிப்புக்கு வழி வகுத்தது. இதன்போதுதான் ‘வயின்’ படிவுகளில் காணப்படும் புளியக அமில உப்பும், படிகங்கள் சமச்சீரற்றவை என்பதையும், நொதிப்பு முறையில் காணப்படும் உயிரிகள் ஒளியியல் வினையூக்கம் மிகுந்த மூலக்கூறுகளை உற்பத்தி செய்கின்றன என்பதையும் கண்டறிந்தேன்.


இவ்வாறு இரசாயனத் துறையினூடாக ஆரம்பித்த எனது ஆராய்வூக்கம் உயிரியல் துறையில் பல்வேறுமட்டங்களிலும் தொடர்ந்தது.

**ஓவியா :- ஐயா, ஆரம்ப காலத்தில் ‘பெலிக்ஸ், ஆர்கிமிடிஸ், பூஷட் போன்றோர் “உயிரற்ற பொருட்களிலில் இருந்தே வாழும் உயிரினங்கள் தோன்றுகின்றன” என்று மெய்ப்பித்தது பற்றி உங்கள் கருத்தென்ன?**



மிகக் குறைந்த வார்த்தைகளைக் கொண்ட மொழி - இத்தாலி மொழி.

லூயி :- ஆமாம், இதுவும் எனது கண்டு பிடிப்புகளில் முக்கியமான தொரு விடயம். ஆரம்ப காலங்களில் அவர்கள் இறைச்சியிலிருந்து இலையானும், பட்டமரத் திலிருந்து கறை யானும் தோன்றுவதாக எண்ணினார்கள். இதை எனது ஆராய்ச்சியின் மூலம் தவறென நிரூபித்தேன். ஒரு உயிரி லிருந்தே இன்னொரு உயிர் தோன்றமுடியும் என்பதை மெய்ப்பித்தேன். இது தொடர்பான எனது ஆராய்ச்சிகளே நுண்ணுயிரியலில் எனது ஆர்வத்தைத் தூண்டியது.



ஓவியா :- வயின் நொதித்தல் தொடர்பாக தங்கள் ஆராட்சிகள் வலுப்பெற்றதற்கு ஏதாவது வலிமையான காரணங்கள் உண்டா?

லூயி :- ஆமாம், எனது அப்பா பிரான்சிலுள்ள ஆர்பாய்ஸ் நகரத்தில் ஒரு வியாபாரத்தை தொடங்கி நடத்திவந்தார். இந்நகரத்திலேயே எனது இளமைக்காலத்தைக் கழித்தேன். இந்நகரில் வயின் உற்பத்தி ஒரு பிரதான தொழிலாகக் காணப்பட்டது. எனவேதான் வயின் சீர்கெடுவது தொடர்பான பல்வேறு ஆராய்ச்சிகளை நான் மேற்கொண்டேன். இதன்விளைவாக உணவுப் பொருட்களை அவற்றின் கொதிநிலைக்கு கீழ் சூடாக்குவதன் மூலம் நொதித்தலைத் தடுத்து அவற்றையும் பாதுகாப்பதற்கான ஒரு வழியைக் கண்டுபிடித்தேன். இதைத்தான் தற்போது "பாஸ்ரர் ஆக்கம்" என்கிறார்கள்.




பரவாயில்லையே! சரியாகக் கண்டுபிடித்துவிட்டீர்கள் பாராட்டுக்கள். போனஸ் தகவல் இதோ – பிரான்ஸ் நாட்டின் தேசியச் சின்னம் லில்லி மலர். இனி நீங்கள் பக்கம் 13இற்கு வரமுடியுமா?



ஸ்பெயின் நாட்டின் தேசியச் சின்னம் - கழுகு

ஓவியா :- நாங்கள் தொற்று நோய் தொடர்பாகவும், இதைத் தடுப்பது தொடர்பாகவும் பிரதானமாக அம்மைப்பால் கட்டும் முறையையும் கண்டுபிடித்துள்ளீர்கள். இது தொடர்பாக இந்த உலகமே தங்களுக்குத் தலைவணங்கக் கடமைப்பட்டுள்ளது. மற்றும் நீர் வெறுப்பு நோய் பற்றிய தங்கள் ஆராய்ச்சி வெற்றியளித்ததா ஐயா?



லூயி :- நன்றி அம்மா, தங்கள் புகழ்ச்சிக்கு நான் உரியவனெனில் நான் பெருமைப்படுகிறேன். அம்மா, நான் கூட இந்தக் கொடிய நோய்களுக்கு ஆளானவன் தான். ஆமாம். 1868இல் எனது 46வது வயதில் வாதநோயினால் எனது உடலின் ஒரு பகுதி செயலற்றுப் போயிற்று. இருந்தாலும் நான் சோர்ந்து விடவில்லை. மீண்டும் எனது பணியில் தீவிரமாக ஈடுபட்டேன். பீர் (Beer) மதுபானத்தைப் பாதுகாப்பதற்கு பாஸ்டர் முறையைக் கண்டுபிடித்தேன். ஆடுகளுக்கும் மற்ற விலங்குகளுக்கும் ஏற்படும் நச்சுச்சீக்கட்டு (அந்திரக்ஸ்) என்ற பயங்கர நோய்க்கு அம்மை மருந்து ஒன்றைக் கண்டுபிடித்தேன். மகப்பேற்றுக்குப் பின்பு பெண்களை பெருமளவு பலி கொண்டுவந்த பேறுகால காய்ச்சலுக்கு தீர்வனைக் கண்டேன். இருந்தாலும் நீர்வெறுப்பு நோய் (நாய் வெறி நோய்) தொடர்பாக நான் மேற்கொண்ட ஆராய்ச்சிகள் எனக்குத் தோல்விகளையே தந்தது.

ஓவியா :- நன்றி ஐயா, நீண்ட சுவையான தகவல்கள், மனிதகுல மேம்பாடு பற்றிய தங்களது அக்கறை அனைத்துக்காகவும் பூங்கனி சார்பில் தங்களுக்கு நன்றி கூறுவதுடன் இறுதியாக ஒரு கேள்வி, இன்றைய இளைய சமுதாயத்தினர்க்கு நீங்கள் என்ன கூறிவைக்க விரும்புகிறீர்கள்?

லூயி :- "இந்த உலகத்தில் பணம் பெரியது. அனைத்தையும் தீர்மானிக்கக்கூடியது. எனினும் அதனிலும் பெரியது மனிதம். அனைத்தையும் தீர்மானிக்கக்கூடியது மனிதம். நன்றி"

ஓவியா :- நன்றி ஐயா.

தயாரிப்பு :- க. ரணேஷ்



ஆங்கில பைபிளில் and எனும் வார்த்தை 46277 இடங்களில் வருகிறது.

பூங்கனியின் தேடல்

# சாதனைப்பெண் சாமந்தி



திறமையுள்ள மாணவர்களை வெளியுலகிற்கு அறிமுகப்படுத்தி, கௌரவிக்க வேண்டும் எனும் நோக்கில் பூங்கனியின் தேடலை ஆரம்பித்தோம். தேடலில் முதலில் சிக்கியவர் சாமந்தி. மு/வித்தியானந்தாக் கல்லூரியின் உயர்தர விஞ்ஞானப் பிரிவு மாணவியாகிய இவர் பல சாதனைகளைச் செய்துள்ளார் என்று பாடசாலையின் உப அதிபர் திரு. எஸ்.உதயகுமார் தகவல்தர சாமந்தியோடு பேசினோம்.

"எனக்கு 2003 O/L பரீட்சையில் முல்லைத்தீவு டிஸ்ரிக்ல பெஸ்ற் ரேங்க்" (first rank) கிடைச்சது" என்று ஆங்கிலம் கலந்த தமிழில் பேச்சை ஆரம்பித்தார் சாமந்தி.

அவ்வருடம் 9A, B பெறுபேற்றைப் பெற்ற இவர் தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சையிலும் சித்தியடைந்துள்ளார். அத்துடன் பாடசாலையிலும், வெளியிலும் நடைபெறும் சகல போட்டிகளிலும் பங்குபற்றிப் பரிசில்களைப் பெற்றிருக்கிறார்.

"உங்கள் வெற்றியின் ரகசியம் என்ன?" என்று நாம் வினாத்தொடுக்க, "சின்ன வயசில இருந்தே எனக்கு படிப்பில நல்ல ஆர்வம், இதற்கு எனது பெற்றோர் கள்தான் முதற்காரணம், அத்தோடு எனது ஆசிரியர்களும் என்னை நன்கு உற்சாகப்படுத்தி வழிநடத்தினார்கள். என்னதான் மற்றவர்கள் ஊக்கப் படுத்தினாலும், ஒவ்வொரு மாணவரும் சுயமாக முயற்சி செய்து படிக்கவேண்டும், படிக்கிற பாடங்களில நோட்ஸ் (Notes) எடுத்து அதை திரும்பத் திரும்ப படிக்கவேணும். ஒருநாளைக்கு கிளாசுக்கு (Class) வராவிட்டால், வந்தவர்களைக் கேட்டு அன்றைக்கே அந்தப் பாடத்தைப் படிக்க வேணும்" என்று கூறும் சாமந்தி தனது எதிர்கால இலட்சியம் "வைத்தியராக வரவேண்டும்" என்கிறார்.



மாவட்டத்தில் முதலிடம் பெற்றமைக்காக இவருக்கு மக்கள் வங்கியின் "சிசு உதான" புலமைப்பரிசில் திட்டத்தினூடாக 30,000 ரூபா பணப் பரிசும் கிடைத்திருக்கிறது.

சாமந்தியின் சாதனைகள் குறித்து அவரது தாயார் திருமதி. குகனிடம் கேட்டபோது, "எங்கட பிள்ளைகள் எவ்வளவோ கஷ்டப்பட்டுத்தான் படிக்கினம், இங்கால சரியான வசதிகள் இல்ல, நிறைய வளப்பற்றாக்குறைகள் இருக்கு, அப்படியிருந்தும் எங்கட பிள்ளையள் நல்லாப் படிக்கினம், சந்தோஷமாக இருக்கு" என்றார்.

அதே சந்தோசம்தான் எமக்கும்!

**சாமந்தியின் எதிர்கால வெற்றிகளுக்கு எமது வாழ்த்துக்கள்!**

– ஹரீஸ்



கீரியின் வால் அதன் உடலைவிட நீளமானது.

03

# ரகசிய புதையல்

கே. ஆர். ஆர்.






கனி - 2ல் - ஆர்த்தியின் அப்பா வெளியே போய்விட இரவு நேரத்தில் வீட்டில் தனியாக இருக்கிறாள் ஆர்த்தி. அப்போது தொலைபேசியில் யாரோ அவளைக் கடத்தப்போவதாக கூறுகிறார்கள். சற்று நேரம் கழித்து ஆர்த்தி வீட்டுக் கதவில் யாரோ தட்டும் சத்தம் கேட்கிறது. இனி!



சேரமன்னர்களைப் பற்றிக் கூறும் நூல் - பரிபாடல்.

கதவு தொடர்ந்து தட்டப்பட்டுக் கொண்டேயிருந்தது. ஆர்த்திக்குப் பயத்தினால் இதயமே வெடித்துவிடும்போலிருந்தது. கண்களை இறுக மூடிக்கொண்ட அவள் அலுமாரிக்குப் பின்னால் சென்று நன்கு ஒளிந்து கொண்டாள்.



வெளியே... கதவைத் தட்டிக் கொண்டிருந்த அந்தக் கரிய நிற உருவம், தட்டுவதை நிறுத்திவிட்டு வீட்டின் பின்புறம் சென்றது. ஆர்த்தி ஜன்னல்களை அடைக்கும் போது, பதட்டத்தினால் வீட்டின் பின்புறம் இருந்த ஒரு ஜன்னலைக் கவனிக்கவில்லை. அது திறந்தே கிடந்தது. அந்த ஜன்னலினூடாக ஏறி உள்ளே குதித்த அந்த உருவம் மெல்ல... மெல்ல... நடந்து முன்மண்டபத்திற்கு வந்தது.

காலடிச் சத்தம் கேட்ட ஆர்த்தி திடுக்கிட்டாள்.

''ரெலி போனில் கடத்தப்போவதாகச் சொன்னவன் வந்துவிட்டானா? எப்படியாவது அவனிடம்இருந்து தப்ப வேணும்.

"ஆர்த்தி.... ஆர்த்தி..."

முன் மண்டபத்தில நின்று அந்த உருவம் குரல் கொடுத்தது. ஆர்த்திக்குப் போன உயிர் திரும்பி வந்தது. அந்தக் குரல் அவளுக்கு நன்கு பரீட்சையமான அவளது அண்ணாவின் குரல்.

கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தாள். ஆர்த்தி அனைத்து லைற்களையும் ஒன் செய்தாள்.

''என்ன ஆர்த்தி அப்பா இல்லையா? வீட்டில லைற்களை ஒப் பண்ணிட்டு எங்க போய்ட்டாய்? படிக்கலையா?''

வெகு இயல்பாகக் கேட்டான் ஜேம்ஸ்! அவளது அண்ணா.

ஆர்த்தி நடந்ததைக் கூறினாள். அதைக்கேட்டு ஜேம்ஸ் பெரிதாகச் சிரித்தான்.

''யாராவது வேண்டுமென்று வெருட்டியிருப்பார்கள்! உன்னைக் கடத்துவதால் அவர்களுக்கு என்னலாபம்?''

''இல்லையண்ணா... அந்தக் குரல்............''



நம் தலையில் 22 எலும்புகள் உள்ளன.

“டோன்ற் கெற் ரென்சன் ஆர்த்தி... இது யாரோ வேலையில் லாதவர்களின் விளை யாட்டு”

ஆர்த்திக்கு எதுவுமே புரியவில்லை. “ஏன் அண்ணா அதைப் பற்றிக் கதைக்க விடுறார் இல்லை”

அவளுக்கு குழப்பமாக இருந்தது.

“ட்றிங்.... ட்றிங்....”

மீண்டும் தொலைபேசி அழைத்தது.

ஆர்த்தி எடுக்கப்போக குறுக்கே பாய்ந்து ரீசிவரை எடுத்தான் ஜேம்ஸ்.

“ஆர்த்தி உனக்கு எக்ஸாம் வருதல்லோ போய்ப்படி, நான் கதைக்கிறன்”.

ஆர்த்தி, தனதுஅறைக்குப் போனாள்.

ஜேம்ஸ் கதைத்தான்.

“விஸ்வா, எங்கட பிளானில சின்ன மாற்றம், இப்ப அப்பா வீட்டில இல்லை, நீ அரை மணித்தியாலம் கழிச்சு என்ர செல்போனுக்கு எடு, எல்லாத்தையும் சொல்றன்”.

ஜேம்ஸ் கதைத்தது ஆர்த்தியின் காதில் விழுந்தது. அவளது அண்ணாவின் நடவடிக்கைகள் அவளுக்குப் புதிராகவே இருந்தன.

“போனகிழமை விஸ்வா அண்ணனோட எங்கேயோ போன அண்ணா, இன்றுதான் வந்திருக்கிறார். கேட்டா பிசினஸ் என்கிறார். கொஞ்சநாளா அண்ணாட நடவடிக்கைகள் சரியில்லை”

சற்று நேரம் கழித்து ஆர்த்தி வெளியே வந்தாள். அங்கே அவள் கண்ட காட்சி அவளது இரத்தத்தை உறையச் செய்தது. சுவரில் மாட்டப் பட்டிருந்த அப்பாவின் படத்திற்கு நேரே கைத்துப்பாக்கியை நீட்டிய ஜேம்ஸ் “உங்களைக் கொல்லாமல் விடமாட்டேன்” என்று முணுமுணுத்துக் கொண்டிருந்தான்.

* * *

“போதும் பாட்டி”

“இல்ல அருண் இன்னும் கொஞ்சம் சாப்பிடப்பா”

“ஐயோ... பாட்டி எனக்கு வயிறு வெடிக்கும் போல இருக்கு காணும்”




நீங்கள் தெரியாது என்று சொன்னதும் ஒரு வகையில் நல்லதுதான். ஏனென்றால் சீனர்கள் என்று சொன்னவர்கள் தவளைப் பொரியல் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். சரி இப்போ 46ம் பக்கத்தை நாடுங்கள்.....



அர்த்தசாஸ்திரம் என்னும் நூலை எழுதியவர் - சாணக்கியர்.

"நீ இரவும் சாப்பிடல... இராத்திரி நான் எவ்வளவு பயந்து போனேன் தெரியுமா"

"அதுக்கு என்ன செய்யிறது பாட்டி யாரோ ஒரு பெண்குரல் அலறும் சத்தம் கேட்டது. அதுதான் நான் காப்பற றப் போய்......"

"அதுக்காக இருண் டபிறகு இப்படியா நடுக்காட் டுக்குப் போறது"

"டோன்ட் வொறி பாட்டி, அதுதான் வந்திட்டேனே, அதுசரி பாட்டி இந்தக் காட்டுக்குள்ள ரகசிய புதையல் இருக்காமே உண்மையா?"

"எனக்குத் தெரியாது"

"என்ன பாட்டி நீங்க இந்த மாவூர் கிராமத்தில் எழுபது வருஷமா இருக்கீங்க உங்களுக்குத் தெரியாதா?"

"இல்ல அருண், எனக்குத் தெரியாது, அதைப் பற்றிக் கதைக்காதே"

"நோ பாட்டி, நீங்க எதையோ மறைக்கிறீங்க, உங்களுக்கு ரகசிய புதையல் பற்றி தெரியும் பிளீஸ் பாட்டி சொல்லுங்க."

"அருண், உனக்கு பள்ளிக்கூடம் தொடங்க இன்னும் பத்துநாள் இருக்கு...."

"ஏன் பாட்டி கதைய மாத்துறீங்க... அந்த ரகசியப் புதையல் பற்றி உங்களுக்குத் தெரியாதா?"

"ரகசிய புதையல்.... ரகசிய புதையல்.... அந்தக் கொடிய புதையலை ஏன் திரும்பத்திரும்ப ஞாபகப்படுத்துகிறாய், இரண்டு உயிர்களைப் பலியெடுத்த அந்தப் புதையல் இப்ப எதுக்கு உனக்கு?"

"ஏன் பாட்டி கோபப் படுறீங்க? யார் அந்த இரண்டு பேர்?"

பாட்டி எதுவுமே பேச வில்லை. அவரது கண்களிலிருந்து கண்ணீர் வந்தது.

"ஏன் பாட்டி அழுறீங்க, சொல்லுங்க யார் அந்த இரண்டு பேர்"

"உ.... உன்னோட தாத்தாவும், உன்னோட அம்மாவும்தான் அந்த ரெண்டு பேரும்"

"என்ன பாட்டி சொல்லு றீங்க?"

"உண்மைதான் அருண். அந்த ரகசியப் புதையல் இன்னுமொரு உயிரையும் எடுக்கப் போகுது"

"யார் பாட்டி அது?"

"நீதான்"

- தொடரும்



இந்தியாவின் தேசிய மரம் - ஆலமரம்.

# வாழ்த்துக்கள்




வவுனியா சிதம்பரபுரம் ஸ்ரீ நாகராஜா வித்தியாலயம் வெளியிட்டிருக்கும் "பெறுபேறுகளில் ஒரு கண்ணோட்டம்" கைநூல் கிடைக்கப் பெற்றோம்.

அதிபர் திரு. சி.விசுவலிங்கம் அவர்களால் தயாரிக்கப்பட்ட இக் கைநூலில் 2004ம் ஆண்டு க.பொ.த (சா/த) பரீட்சைப் பெறுபேறு அதிபரின் கண்ணோட்டம், தரம்-11 மாணவர்களுக்கு கற்பித்த ஆசிரியர்களின் விபரம், ஒரே பார்வையில் செயலட்டை, செயலட்டை தொடர்பான ஆசிரியர் பார்வை, மாணவர்கள் வளர்க்க வேண்டிய திறன்கள் போன்ற அம்சங்கள் இடம்பெற்றுள்ளன.

முதன்முதலாக பரீட்சைக்குத் தோற்றியவர்களில் 53% மானோர் சித்தியடைந்தமை பெருமைக்குரியவிடயம். என்று அதிபர் குறிப்பிட்டுள்ளார். 2005இல் 65% மாணவர்களைச் சித்தியடையச் செய்வதே தமது இலக்கு என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

12 பக்கங்களில் தயாரிக்கப்பட்டுள்ள இந்நூலில் "இருளைப் பழிப்பதைவிட ஒரு சிறு ஒளியை ஏற்றி வைப்பதே மேல்" என்ற அழகிய வாசகமும் காணப்படுகிறது.

**ஸ்ரீ நாகராஜா வித்தியாலயத்திற்கு எமது வாழ்த்துக்கள்.**



- கடந்த வருட க.பொ.த (சா/த) பரீட்சையில் வவுனியா வடக்கு வலயத்தில் வ/நெடுங்கேணி ம.வி.மாணவன் செல்வன் பாக்கியநாதன் மிதுலன் 6A, 2B, C, S பெறுபேற்றைப் முதலிடத்திலுள்ளார்.
- அதேவேளை வ/குளவிசுட்டான் அ.த.க. பாடசாலை மாணவி சுந்தரம்பிள்ளை கஜந்தி 6A, B, C, S பெறுபேற்றைப் பெற்று இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார். இவர்கள் இருவருக்கும் எமது வாழ்த்துக்கள்.

**இம்மாத இதழில் இடம்பெற்றுள்ள ஒருவரித் தகவல்களைத் தொகுத்தவர் இ.சிறீஸ்கந்தராசா - கொழும்பு.**



வடஆபிரிக்காவில் உள்ள ஒரே ஒரு அரபு நாடு - மொரோக்கோ.

# நீங்கள் சொன்னவை

"எங்களுடைய "பூங்கனி" இதழ் மிகவும் வரவேற்பை பெற்ற இதழாகும். குறிப்பாக இளையதலைமுறையை கருத்தில் கொண்டு அரசியல், சினிமா, போன்ற விடயங்களை விடுத்து அறிவை வளர்க்க உருவான இதழாக கருதமுடிகிறது."

**வே.தீபன்** தரம்-12 கலை புதுக்குடியிருப்பு ம.வி முல்லைத்தீவு.






அன்புடன் ஆசிரியருக்கு,

பூங்கனி
பல தகவல்களைப்
பெறுவதற்கும் சிறந்த
நூலாக விளங்குகிறது.
மாணவர்களுக்கு
போட்டிகள் வைத்துப்
பரிசுகள் கொடுக்கிறீர்கள் நன்றி.
பூங்கனியில்
குறுக்கெழுத்துப்போட்டியும்
வெளியிடலாமே....?

**சி.சிவயாழினி**, இல. 75, பூந்தோட்டம், வவுனியா.

மே மாத பூங்கனியில் கலக்கிவிட்டீர்கள்.
பூங்கனி இதழ் அசல்
இந்திய இதழ்போலவே உள்ளது.
ஆக்கங்கள் சூப்பர்.
இப்பொழுது எழுதுவதை மறந்த
இளைய சமுதாயம்
"எங்கள் பூங்கனியை"
பயன்படுத்துவார்கள் என எண்ணுகிறேன்.

**வேலும்மயிலும் துவாரகன்**, தரம் 9A, வ/விபுலானந்தாக் கல்லூரி.

பூங்கனி
கனி - 2 வாசித்தேன்
சூப்பரோ சூப்பர்
அனைத்து ஆக்கங்களுமே
மிக சிறப்பாக இருக்கின்றன.
தொடர்ந்தும் புதுமையாகவும்
வித்தியாசமாகவும் வெளிவர
வேண்டுமென எதிர்பார்க்கிறேன்.

**இ.சுரேஷ்குமார்**, 10ம் ஒழுங்கை, கோவில்குளம், வவுனியா.

"குறும்புக்குமரன்"
சரியான குறும்பையா.
வாசிச்சதில் இருந்து ஒரே
சிரிப்புத்தான். எங்கள்
வீட்டில் எல்லோரும்
பூங்கனியை தொடர்ந்து
வாசிப்போம்.
தொடர்ந்தும் "குறும்புக்
குமரனைப்" போடுங்கள.

**ஜெ.ஜெம்பட்**, பெரியகடை, மன்னார்.

பூங்கனியில் மாதம் ஒரு பாடசாலை, பொதுஅறிவுத் தகவல்கள்,
கணினி கண்ணா கணினி www.ஆச்சரியம்.com,
இன்னும் உங்கள் குறும்புகள் எல்லாமே சூப்பர்.

**ச.காந்தருபன்**, கோண்டாவில், யாழ்ப்பாணம்.

**முகப்பில் - ரகுநாதன் யதுஷாந்த், சாமந்தி**



நான்கு தீவுகளால் உருவான நாடு - ஜப்பான்.

# மருத்துவப் பக்கம்

## உள்முறிவுக் காயங்கள்

கடந்த பூங்கனியில் சொன்னவற்றையெல்லாம் அப்படியே ஞாபகத்தில் வைத்திருந்து, சந்தர்ப்பம் வரும்போது சரியாகப் பயன்படுத்துவீர்கள் என்று தெரியும். சரி, இம்முறை உள்முறிவுக் காயங்கள் பற்றிப் பார்ப்போம்.




இது வெளிமுறிவுக் காயத்தைவிட கொஞ்சம் பிரச்சனைக்குரிய விடயம். ஏனென்றால் ஒன்று இது எமது வெறுங் கண்களுக்குத் தெரியாது. இரண்டாவது இரத்தம் கசியலாம், கசிந்தாலும் தெரியாது. மூன்றாவது சிலவேளை உடனடியாக நோவு இருக்காது கண்டல் காயங்களாக இருந்து காலப்போக்கில் பாரிய பின்விளைவுகளை ஏற்படுத்தலாம். எனவே யாராவது விபத்துக்குள்ளானால் அந்தநபரை தூக்கி நிறுத்தி “நல்ல காலம் காயம் படல மெதுவாக வீட்டுக்குப் போய்ச் சேருங்க” என்று சொல்லாமல் எங்காவது வலிக்கிறதா சுருக்கு, முறிவு ஏதாவது உண்டா என்று தொட்டுப் பார்க்கலாம். அப்படி உள்முறிவு தென்பட்டால் நீங்களே அதை சரிசெய்ய முனையவேண்டாம். (அதுவே இன்னுமொரு விபத்தாகமாறிவிடும்) அப்படியே மட்டையை வைத்துக் கட்டி பண்டேஜ் செய்து ஆடாமல் அசையாமல் வைத்தியரிடம் கொண்டு செல்லவும். மிகுதியை அவர்கள் பார்த்துக்கொள்வார்கள்.











**முதலுதவியோன்**

**மீண்டும் உதவுவான்**

தொகுப்பு : ராஜேஸ்







உலகின் மிக உயரமான நாடு - திபெத்.

# பொது அறிவு

S.S.வாசன்

## இந்தியாவும் மாநிலங்களும்

இந்தியாவில் 28 மாநிலங்கள் தற்போது உள்ளன. இதில் சனத்தொகை கூடிய மாநிலம் உத்திரப்பிரதேசம். சனத்தொகை மிகவும் குறைந்த மாநிலம் சிக்கிம். இது தற்போது சீனாவால் இந்தியாவுக்கு விட்டுக் கொடுக்கப்பட்டுள்ளது. 2000மாம் அண்டு வரை 25 மாநிலங்களே காணப்பட்டன. 2000ம் அண்டு ஆகஸ்ற் மத்திய பிரதேசத்தின் ஒரு பகுதி சட்டீஸ்கர் 26வது மாநிலமாகவும், 2000 ஆண்டு நவம்பர் 27வது மாநிலமாக உத்திரப்பிரதேசத்தில் இருந்து உத்தராஞ்சல் மாநிலமும், 2000ம் ஆண்டு நவம்பரில் 28வது மாநிலமாக பீகார் மாநிலத்தில் இருந்து பிரிந்த ஜார்க்கண்ட் பிரகடனம் செய்யப்பட்டது.

இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இமாசலப் பிரதேசமும், இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும், ஜம்மு~காஷ்மீரும் பிரச்சனையான மாநிலங்களாகும்.

## முதலாம் உலகப்போர்

முதலாம் உலகப்போர் 1914ம் ஆண்டு தொடங்கி 1918ம் அண்டு முடிவடைந்தது. ஐரோப்பாவிலுள்ள ஒஸ்ரியா நாட்டின் இளவரசன் பேர்டிணண்ட்பிரான்சிஸ் என்பவர் இன்று யூகோசொலாவியா என அழைக்கப்படும் சேபியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்தபோது சேபிய இனத்தவரால் கைக்குண்டு வீசி கொலைசெய்யப்பட்டார். இதற்கு மன்னிப்புக்கோருமாறு ஒஸ்ரியா சேபியாவிடம் கேட்டபோது சேபியா அதற்கு இணங்க மறுத்தது. ஜேர்மனியின் உதவியுடன் ஒஸ்ரியா சேபியாமீது படையெடுத்தது. இதனால் ஜேர்மனி~ஒஸ்ரியா~இத்தாலி அச்சு அணியாகவும், ரகஷ்யா~அமெரிக்கா~பிரான்ஸ்~பிரித்தானியா நேச அணியாகவும் நின்று போரிட்டன. இறுதியில் ஜேர்மனி தோற்கடிக்கப்பட்டது. 1919இல் சர்வதேச சங்கம் என்ற ஐ.நா. சபைக்கு முன்னோடியான அமைப்புத் தோன்றியது.

## நோபல் பரிசு

இலங்கையர்களுக்கு இதுவரைகிடைக்காத அரிய பரிசு இது! இப்பரிசு எம்மவரின் கரங்களில் தவழும்காலம் வெகு தொலைவில் இல்லை. இதன் வரலாறு இதுதான்! ஆல்பிரட் நோபல்~இவர் சுவீடன் நாட்டைச் சேர்ந்தவர். டைனமட் இவரது கண்டுபிடிப்பு! அவரது உயிலில் தனது சொத்தை இவ்வாறானதொரு பணிக்கு செலவிட அவர் குறிப்பிட்டிருந்தார். இதன்படி 1901ம் ஆண்டிலிருந்து இப்பரிசு வழங்கப்பட்டு வருகிறது. ஆண்டுதோறும் சமாதானம், இலக்கியம், பௌதீகம், இரசாயனம், பொருளாதாரம், மருத்துவம் என்ற ஆறு துறைகளுக்குஇப்பரிசு வழங்கப்படுகிறது. ஒரு பதக்கம், சான்றிதழ், பணக்கட்டு ஆகியன நோபல் பரிசு வென்றோருக்கு வழங்கப்படுகிறது.





“குர்ஆன்” என்பதன் அர்த்தம் “வாசிக்கப்படுகிறது”.

ஜூன் ~ 05 உலக சூழல் தினமாகும். 1972 சுவீடனின் தலைநகர் ஸ்ரொக்கோம் மாநாட்டில் "மனிதகுடியிருப்பும் சுற்றாடலும்" என்ற தலைப்பில் இடம்பெற்ற மாநாட்டின் முடிவில் இத்தினம் பிரகடணப் படுத்தப்பட்டது. உலகில் இடம்பெற்ற சூழல் மாநாடுகள் சில பின்வருமாறு :

## உலக சூழல்தினம்

**ஜூன் 05**

| | | |
|---|---|---|
| 1965 | ~ | பெல்கிரேட் மாநாடு (யூகோஸ்லோவியா) |
| 1972 | ~ | ஸ்ரொக்கோம் மாநாடு (சுவீடன்) |
| 1975 | ~ | டிபிலிசி மாநாடு (ஜோர்ஜியா) |
| 1985 | ~ | வியன்னாமாநாடு (ஒஸ்ரியா) |
| 1987 | ~ | மொன்றியல் மாநாடு (கனடா) |
| 1992 | ~ | றியோடிஜெனிரோ மாநாடு (பிறேசில்) |
| 1992 | ~ | மிகிந்தலை மாநாடு (இலங்கை) |
| 1994 | ~ | மன்செஸ்ரர் மாநாடு (இங்கிலாந்து) |
| 1997 | ~ | கியாட்டோ மாநாடு (ஜப்பான்) |
| 2002 | ~ | ஜொகனர்ஸ்பேர்க் மாநாடு (தென்னாப்பிரிக்கா) |



## போதைப்பொருள்



மாணவர்களே விழிப்பாக இருங்கள். உங்களுக்கு முன்பின் தெரியாத எவராவது புதுவகை பொருட்களைத் தந்தால் வாங்கி சாப்பிட்டுவிடாதீர்கள்! அவை போதைப் பொருட்களாக இருக்கலாம். பீடா, சோடா போன்றவற்றிலும் இவை கலக்கப்பட்டு விற்கப்படுகின்றன. பண்டைய காலத்தில் அபின், கஞ்சா, கள்ளு, சாராயம், கசிப்பு, பீடி, சிகரட், சுருட்டு என்பன போதைப் பொருட்களாக பயன்படுத்தப்பட்டன. இன்று ஹெரோயின், கோகேய்ன், கோடீன், மோர்பீன், கனபிஸ், மர்யுவானா, ஹஸீஸ், எல்.எஸ்.டி என்பன போதைப் பொருட்களாக விற்கப்படுகின்றன. ஒவ்வொரு வருடமும் யூன் 26 உலக போதைப் பொருள் ஒழிப்பு தினமாகப் பிரகடணப் படுத்தப்பட்டள்ளது.

## சத்தியஜித்ரே

**Artfilm** எனப்படும் கலைசார்ந்த படங்களைத் தந்து புகழ்பெற்ற இந்தியவங்காளி மொழி இயக்குனர் இவர். இவரது படங்கள் தத்ரூபமானவை. இவருக்கு 1984இல் இந்தியாவின் மிக உயர்ந்த திரைப்பட விருதான தாதாசாகேப் பால்கே விருது வழங்கப்பட்டது. பதேர்பாஞ்சாலி (1955), அழகர்சன்கார் (1959), சீமாபந்தா (1971), அகதூக் (1991) என்பன தேசிய விருதுபெற்ற இவரது படங்களாகும்.

இச் சஞ்சிகை இல. 141, திருநாவற்குளம் வவுனியாவில் அமைந்துள்ள காற்றுபப்ளிகேஷன் சார்பாக, 61B, முதலாம் குறுக்குத்தெரு, வவுனியாவில் அமைந்துள்ள வாணி கணனி பதிப்பகத்தில் அச்சிட்டு 2005 ஜூன் முதலாம் திகதி வெளியிடப்பட்டது.



மூன்று தலைநகரங்களைக் கொண்ட நாடு - தென்அமெரிக்கா.

# கோபியின் புதிர்ப்போட்டி

## இலக்கம் 03

கோபியின் புதிர்ப்போட்டி இல. 01ல் ஏராளமானவர்கள் பங்குபற்றி அசத்திவிட்டீர்கள். உங்கள் கற்பனைத் திறனைக் கண்டு எமக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை. பரிசுக்குரியவர்களை தெரிவுசெய்வதில் போதும், போதும் என்று ஆகிவிட்டது. பங்குபற்றிய அனைவருக்கும் எமது நன்றிகளும், பாராட்டுக்களும்.

**1வது பரிசுக்குரியவர்**

**A. ரிரோன்**
ம/புதிய சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை,
மன்னார்.

**இவரது விடைகள் இதோ :**

1. அன்று பௌர்ணமி நாள். நாய்க்குட்டி எழுந்து பார்த்தபொழுது நிலவு வட்டவடிவமாகக் காட்சி தந்தது. இதைப் பார்த்த நாய்க்குட்டி ஓ...... எனக் கத்தியது. நிலவு ஆங்கில எழுத்தான 'O' வடிவில் காட்சிதந்தது. ஆகவேதான் நாய்க்குட்டி ஓ...... எனக் கத்தியது.
2. வீதியில் நடந்துசென்றவர் ஆங்கிலேயர். எதிரே வந்தவர் வழமையான பேச்சு முறைப்படி "எத்தனை மணி?" என்று கேட்டார். இவரும் தன்னிடம் இருந்த 50ரூபாயை எடுத்துக் கொடுத்தார். ஏன் தெரியுமா? ஆங்கிலத்தில் மணி (Money) என்றால் பணம். ஆகவேதான் பணம் கொடுத்தார்.

**மேலும் பரிசுபெறும் மூவர்.**

**உ. தர்சினி**
60/5, காளிகோவில் வீதி,
மதவுவைத்தகுளம்,
வவுனியா.

**த. சுஜித்தா**
தரம் 9B,
வ/நெடுங்கேணி மகாவித்தியாலயம்
நெடுங்கேணி.

**துவாரகா தங்கவடிவேல்**
இல. 2D, பாலிநகர்,
வவுனிக்குளம்.

**பொருத்தமான விடைகள் எழுதி பாராட்டைப் பெறுபவர்கள் :**

ந.பத்மப்பிரியன், இல. 12. ஐயனார்கோவில்வீதி, வண்-மேற்கு, யாழ்ப்பாணம்.
த.பிரணவன், இல. 21, பாலிநகர், வவுனிக்குளம்.
பி.சுபத்திரா, தரம் 7, வீரபுரம் மணிவாசகர் வித்தியாலயம்.
இ.சுபாசினி, தரம் 11, வ/புதுக்குளம் ம.வி.
க.டிலெக்சன், தரம் 9, வ/கனகராயன்குளம், ம.வி.
உ.நிரோஜினி, தரம் 11G, வ/இறம்பைக்குளம், ம.ம.வி.
பா.தனுசன், தரம் 9A, C.C.T.M.S. வவுனியா.
கே.ஜனகசிவசுதன், தரம் 11B, கிளி/பளைமத்திய கல்லூரி.
த.விதுலன், தரம் 9A, யாழ்ப்பாணம் விக்டோரியா கல்லூரி.
சசிரேகா சண்முகம், தரம் 11A, வ/இந்துக்கல்லூரி, வவுனியா.



நைல்நதி உகண்டாவில் உற்பத்தியாகிறது.

# இம்மாதக்கேள்வி

*காகம் ஏன் கா.... கா.... என்று கத்துகிறது?*

## விடைகளை அனுப்பவேண்டிய முகவரி

**கோபியின் புதிர்ப்போட்டி-03**
**கோபி ஏஜென்சி**
**இல-33, மில் வீதி, வவுனியா.**

**பரிசு என்ன?**

மிகச் சிறந்த பதில்கள் எழுதும் 10 பேருக்கு இ.சிறீல் கந்தராசா எழுதிய "பஞ்சவர்ணக் கதம்பம்" நூல் பரிசாக வழங்கப்படும்.

எங்கே உங்கள்
கற்பனைக் குதிரையை
தட்டிவிடுங்கள்.
பதில்களை எழுதுங்கள்.....
பரிசுகளை வெல்லுங்கள்.....

வெற்றிபெற்ற பதில்களும் வெற்றிபெற்றோர் விபரமும் ஆகஸ்ட் மாத பூங்கனியில் வெளியாகும்.

**முடிவுத் திகதி 30-06-2005**


வெளிநாட்டில் உங்கள் உறவுகள் அனுப்பும் பணத்தைப் ஓரிரு நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள வேண்டுமா? உடன் தொடர்பு கொள்ளுங்கள்.

**கோபி ஏஜென்சி** இல - 33, மில்வீதி, வவுனியா.

உலகெங்கிலிமிருந்தும் விரைவாகப் பணத்தைப் பெற ஒரே வழி

**WESTERN UNION | மணி டிரான்ஸ்ஃபர்**

Western Union ன் அங்கீகாரம் பெற்ற முகவர்கள்
**கோபி ஏஜென்சி**
**இல-33, மில் வீதி,**
**வவுனியா.**

**10 இலக்கங்களுடன் நாடுங்கள்**

**T.P No : 024 - 2222411, 024 - 4589225, 024 - 2224351**

2004ம் ஆண்டிலும் மிகச் சிறந்த முகவருக்கான விருதினையும் பெற்று வெற்றி நடைபோடுகிறது கோபி ஏஜென்சி.




ஸ்பெயின் நாட்டின் முக்கிய உற்பத்திப்பொருள் - குங்குமப்பூ

# மாணவர் பக்கம்

## ஆயுர்வேத மருத்துவக் குறிப்புகள்

✶ வசம்பை வறுத்துப் பொடியாக்கி தேனில் குழைத்து உண்டால் குடல்பூச்சி ஒழியும்.

✶ வெங்காயத்தை தேனில் கலந்து சாப்பிட்டு பசம்பால் அருந்திவர உடல் பலம்பெறும்.

✶ தினசரி காலையில் வெறும்வயிற்றில் இஞ்சியுடன் தேன் கலந்து சாப்பிட்டுவர பல் அழகுபெறும்.

✶ இலந்தை இலைகளை எடுத்து நீர்விட்டு அரைத்து தினமும் ஒரு டம்ளரில் கலந்து அருந்திவர உடல்சதை குறையும்.

✶ திராட்சைப் பழச் சாற்றில் தேன் கலந்து, உணவு உண்டபின் சாப்பிட்டுவர உடல் நடுக்கம் தீரும்.

■ எஸ். அலெக்ஸாண்டர் தரம்-9B, சீ.சீ.ரி.எம்.எஸ், வவுனியா.




## அம்மா

அம்மா என்னும் மூன்றெழுத்தில்
ஆசைக்கு ஒரு தெய்வம்
பாசம் எனும் மூன்றெழுத்தில்
பண்பு மிக்க ஆலயம்.
கண்ணுக்கு இமைபோல
காவல் காக்கும் தெய்வம்
துன்பம் வரும்போதும்
கலக்கம் அடையாத தெய்வம்.
உதிரத்தைப் பாலாக்கி
துன்பத்தை இன்பமாக்கி
அறிவதை அமுதாக்கி
அன்புடன் வளர்க்கும் ஆசான்.

■ செல்வி. சாருகா கந்தசாமி, தரம் - 10, வ/புளியங்குளம் இந்துக் கல்லூரி, புளியங்குளம்.

## விண்வெளித் தகவல்கள்



✦ இலங்கையில் செய்மதி நிலையம் பாதுக்க நகரில் அமைந்துள்ளது.

✦ முதன்முதலில் செய்மதி அனுப்பிய நாடு - **ரஷ்யா.**

✦ முதன்முதலில் விண்வெளிக்குச் சென்றவீரர் - **யூரிக்ககாரின்.**

✦ விண்வெளி வாகனங்கள் தயாரிக்க ஏற்ற உலோகம் - **தைத்தேனியம்.**

✦ முதன் முதலில் சந்திரனில் காலடி வைத்தவர் - **நீல் ஆம்ஸ்ரோங்.**

■ **செல்வி தேனுஜா வாமதேவன்,** தரம்-6B, மு/யோகபுரம் ம.வி. யோகபுரம்.



திபெத் நாட்டில் நான்கு கொம்புகளுடைய ஆடுகள் உள்ளனவாம்.

# திருடாதே

சிறுகதை



ஒரு ஊரில் கதிர் எனும் சிறுவன் வாழ்ந்து வந்தான். அவன் செல்லமாக வளர்த்துவந்த ஆட்டை யாரோ திருடிவிட்டார்கள். கதிர் தனது ஆட்டைத் தேடிப் போனான்.

செல்லும் வழியில் கல் ஒன்று கேட்டது "அண்ணா நானும் வரட்டா?" கதிர் கல்லை எடுத்துக்கொண்டு போனான். சற்றுத் தூரத்தில் பாம்பு ஒன்று கதிரைக் கண்டு "தம்பி எங்கே போகிறீர்? நானும் வரட்டா?" என்றது. கதிர் பாம்பைத் தன்னோடு கூட்டிப் போனான்.

சிறிது தூரம் போனதும், தேள் ஒன்று கதிரைக் கண்டு தானும் வரப்போவதாக கூற அதையும் தன்னோடு அழைத்துச் சென்றான்.

பல இடங்களில் தேடி இறுதியாக திருடனின் வீட்டைக் கண்டுபிடித்தபோது இரவாகியது. திருடன் நன்கு உறங்கிக் கொண்டிருந்தான். திருடனின் வீட்டுக்குப் பின்னால் கதிரின் ஆடு கட்டப்பட்டிருந்தது.


திருடனின் வீட்டில் எரிந்து கொண்டிருந்த விளக்கை மெதுவாகச் சென்று அணைத்தான் கதிர். திருடன் திடுக்கிட்டு எழுந்து தீப்பெட்டியைத் தேடினான். உடனே அவனது கையில் தேள் கொட்டியது. திருடன் தும்புத்தடியை எடுத்தான். அதிலிருந்த பாம்பு அவனைக் கடித்தது. திருடன் வீட்டுக்கு வெளியே ஓடினான். கல்லில் தடக்கி கீழே விழுந்து இறந்தான். கதிர் தனது ஆட்டை அவிழ்த்துக்கொண்டு அந்த மூன்றிற்கும் நன்றிகூறி விடைபெற்றான்.

**லோ.சிந்துஜா** ■
தரம்-9A,
மு/உடையார்கட்டு ம.வி

## வாழ்வதற்குத் தெரிந்து கொள்க

நான் என்று பட்டம் நினைக்கவில்லை
அதற்கு நூல் எனும் துணை தேவை
நான் என்று இயந்திரங்கள் நினைக்கவில்லை
அதற்கு எரிபொருள் எனும் நண்பன் தேவை
நான் என்று கடல் நினைக்கவில்லை
அதற்கு கரை என்னும் ஆதரவு தேவை.
நான் என்று தென்றல் நினைக்கவில்லை
அதற்கு மரம் எனும் அரவணைப்புத் தேவை
நான் என்று கண் நினைக்கவில்லை
அதற்கு இமை எனும் உதவி தேவை
மனிதா..... நீ மட்டும் நான்! நான்! என்று ஏன்
பைத்தியமாக அலைகிறாய்.
மாறு - பிறருக்கு உதவியாக
இராதே - மற்றவருக்கு இன்னலாக
உலகைப் புரிந்துகொள்
வாழ்வதற்குத் தெரிந்து கொள்

**செல்வி. சசிகலா சண்முகம்**
A/L (2007), கலைப்பிரிவு
வ/இந்துக் கல்லூரி, வவுனியா.





பசுப்பாலில் 78% தண்ணீர் உள்ளதாம்.

# விடுகதைக்கு விடையச் சொன்னா....



- மண்ணிலே பிறந்தவள், மஞ்சள் நிறத்தவள், மங்கையரைக் கவர்ந்தவள், மவுசுமிக உயர்ந்தவள், அவள் யார்?
- எங்கள் வீட்டுத் தோட்டத்தில் ஊஞ்சல் ஆடுது மஞ்சள் குருவி அது என்ன?
- மண்ணுக்குள் இருக்கும் பொன்னம்மாள், பெண்கள் கழுத்தில் மின்னுவாள் - அவள் யார்?
- ஒரே நேரத்தில் உறைந்து போவோம், உறைந்ததைக் கண்டு வியந்து போவோம் - அது என்ன?
- நாசியின்றி மூச்சுவிட்டு, வாயின்றி கரியைத் தின்று, உயிரின்றி ஓடுவான் அவன் யார்?

■ **ஏ.டிலக்சன், தரம்-8, தாலிக்குளம், பூவரசங்குளம்.**

- விடைகள் 43ம் பக்கம்

# தீர்த்திப்போமா?




மிக நல்ல நாள் - **இன்று**
மிகவும் கொடிய வெகுமதி - **மன்னிப்பு**
மிகவும் வேண்டாதது - **வெறுப்பு**
மிகக் கொடிய நோய் - **பேராசை**
கீழ்த்தரமான விசயம் - **பொறாமை**
மிகவும் சுலபமானது - **குற்றம் காணல்.**

நம்பக் கூடாதது - **வதந்தி**
ஆபத்தை விளைவிப்பது - **அதிக பேச்சு**
செய்யக் கூடாதது - **உபதேசம்**
செய்யவேண்டியது - **உழைப்பு**
உயர்வுக்கு வழி - **உழைப்பு**
நழுவவிடக் கூடாதது - **வாய்ப்பு.**

■ **க.அனுஜா,**
தரம் - 9B,
ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாசாலை,
புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு

# படியுங்கள்




பாலர் நாங்கள் நாளுமே
பாடல் பாடி ஆடுவோம்.
காலம் முழுதும் கனிவுடன்
கல்விகற்று உயருவோம்
தேடல் தேவை உணர்ந்திட
தாயசேவை செய்திட
பாடசாலை திருப்பமாம்
பாலர் நீங்கள் படியுங்கள்.

**கவிஞர் கயல்வண்ணன்**
**வவுனியா.**



வத்திக்கான் மாளிகை 1400 அறைகளைக் கொண்டது.

# நீங்களும் எழுதலாமே!



பூங்கனி சிறுவர் மாதஇதழ் முற்றுமுழுதாக உங்களது திறமைகளை வெளிக்கொணர்வதற்காகவே வெளியிடப்படுகிறது. எனவே இதில் உங்கள் திறமைகளையும் வெளிப்படுத்த நாம் தயாராகஇருக்கிறோம்.

உங்கள் ஆக்கங்களை கதைகளாகவோ, கட்டுரைகளாகவோ, கவிதைகளாகவோ. ஓவியங்களாகவோ எமக்கு அனுப்பி வையுங்கள். அவற்றை தரம்கண்டு பிரசுரிப்போம்.

அனுப்பவேண்டிய முகவரி :
பூங்கனி
இல. 141, திருநாவற்குளம்,
வவுனியா.



## உங்கள் வீடுதேடி வருகிறது

# பூங்கனி

வாசகர்களே! நீங்கள் வீட்டில் இருந்தவாறே பூங்கனியைப் பெற்றுக்கொள்ள வேண்டுமா? இன்றே எமது சந்தாதாரராக இணைந்துகொள்ளுங்கள். சந்தா விபரங்களை அறிந்துகொள்ள ஒரு தபாலட்டையில் உங்கள் பெயர் முகவரி அருகிலுள்ள தபால்நிலையம் போன்றவற்றை தெளிவாக எழுதி அனுப்பி வையுங்கள். உங்களுக்கு சந்தா விபரங்களை அனுப்பி வைக்கிறோம்.

விடுகதை விடைகள்
1. தங்கம்
2. எலுமிச்சை
3. மஞ்சள்
4. புகைப்படம்
5. புகைவண்டி



வடகொரியாவில் நடமாடும் சினிமாத் தியேட்டர்கள் உள்ளன.

# LET'S LEARN ENGLISH

*by M.K.Thillaimohan*

முதலில் Have/Has எச்சங்களுடன் (Infinitive) வரும் போது எவ்வாறுகருத்துப் பெறுகிறது எனத் தெரிந்துகொண்டோம்.

தற்போது "Going" என்னும் சொல்லோடு சேர்ந்து எப்படி கருத்து அமைகிறது. எப்படி வாக்கியம் அமைக்கப்படுகிறது என்பதனைப் பார்ப்போம்.




I am - நான் இருக்கிறேன்
I was - நான் இருந்தேன்

I am going - நான் போய்க்கொண்டிருக்கிறேன்
I was going - நான் போய்க்கொண்டிருந்தேன்

I am going to go - நான் போகப்போகிறேன்

I was going to go - நான் போக இருந்தேன்

To go என்ற எச்சத்திற்கு பதிலாக To come போட்டுப் பாருங்கள்.

I am going to come - நான் வர இருக்கிறேன் (நிகழ் காலத்தில்)

I was going to come - நான் வர இருந்தேன் (இறந்த காலத்தில்)

I க்கு am பாவிப்பது போல He She It போன்ற ஒருமை எழுவாய்களுக்கு "Is" பாவியுங்கள். இறந்தகால கட்டத்திற்கு I க்கும் மற்றைய ஒருமை எழுவாய்களுக்கும் "was" பாவியுங்கள்.

பன்மை எழுவாய்களுக்கு "are", were என்றும் உதவிச் சொற்களைப் பாவியுங்கள்.

He is going to see you - அவர் உம்மைப் பார்க்க இருக்கிறார்.

He was going to see you - அவர் உம்மைப் பார்க்க இருந்தார்.

She is goint to marry a London Bride -
அவள் லண்டன் மாப்பிள்ளையை திருமணம் முடிக்க இருக்கிறாள்.

She was going to marry a London Bride. But he married another girl-
அவள் ஒரு லண்டன் மாப்பிள்ளையை திருமணம் செய்ய இருந்தாள்.
ஆனால் அவன் வேறொரு பெண்ணை திருமணம் செய்துவிட்டான்.



டென்மார்க் கடல் மட்டத்திற்கு கீழே உள்ள நாடு.

இதேபோன்று

This is a dangerous illness - இது ஒரு ஆபத்தான நோய்.

You are going to die - நீ சாக இருக்கிறாய்.

You were going to die - நீ சாக இருந்தாய்.

The problem is going to solve - பிரச்சனை தீர இருக்கிறது.

The problem was going to solve - பிரச்சனை தீர இருந்தது.

இவற்றை மொழிபெயர்த்துப் பாருங்கள் புரிந்து கொள்வீர்கள்.

I was going to visit you last week

......................................................................................................

The were going to start the war.

......................................................................................................

He is going to resign his job.

......................................................................................................

My father was going to buy that land.

......................................................................................................

They were going to hit him.

......................................................................................................

Indian team is going to win the match.

......................................................................................................

This news is going to appear in to-morrow news paper.

......................................................................................................

That road is going to open next week.

......................................................................................................

Our School was going to open last week. But, it was post-poned.

......................................................................................................

I, Was going to attend that meeting. But then I changed my mind.


......................................................................................................

That new concord flight is going to let to fly to-day.

......................................................................................................



கோப்பி அதிகம் விளையும் நாடு - பிரேசில்.




# Between Two Animals

I am going to run away to escape from this dangerous disaster.

Fool, Our masters are going to die.

I was going to die when they displaced during the war time.

My master was going to take me with him but, his wife didn't agree.

I am going to let his family destroy, because master is not here.

So, I am going to inform them this bad situation.

No, I do it, master is going to worry if his family destroy.




இத்துடன் இந்த ஓட்டப்பந்தயம் இனிதே நிறைவு பெறுகிறது. இதுவரை ஓடி ஓடி படித்த உங்களுக்கு ஒரு இனிய தகவல் சொல்லட்டுமா?
அடுத்த பூங்கனியிலும் இதுபோன்ற ஒரு சுவாரசியமான போட்டி காத்திருக்கிறது.



தாய்லாந்து "புன்னகை நாடு" என அழைக்கப்படுகிறது.

# குறும்புக் குமரனின் குறும்புக் கதைகள்



வணக்கம்! எல்லாருக்கும்! இப்ப நான் உங்களுக்கு ஒரு கதை சொல்லப்போறன். நீங்கள் காலங் காலமாக கேட்டுவாற பழைய கதை ஒன்றை காலத்துக்கு ஏற்றமாதிரி புதுவிதமாக மாத்தியிருக்கிறன். "காகமும் நரியும்" இதுதான் கதையின் தலைப்பு (தலைப்பு பழசுதான்) வாசித்துவிட்டு எப்படி இருக்கென்று சொல்லுங்க!

## காகமும் நரியும்




வழக்கம் போலவே அன்றும் தொலைக் காட்சியில் நாடகம் பார்த்தவாறே பாட்டி வடை சுட்டுக்கொண்டிருந்தார். அப்போது எங்கிருந்தோ வந்த காகம் ஒன்று பாட்டி சுட்டுவைத்த வடைகளைப் பார்த்தது.

"ஆகா... வடை சாப்பிட்டு எவ்வளவு நாளாச்சு இன்டைக்கு எப்படியாவது ஒரு வடையை எடுத்துக்கொண்டு போகவேண்டும்."

காகம் சிறிது நேரம் பொறுமையாக இருந்தது.

தொலைக்காட்சியில் விளம்பர இடைவேளை வந்தது. புதிதாக வந்த வைரநகை ஒன்றுக்கு விளம்பரம் ஒளிபரப்பாக பாட்டி அதில் மூழ்கிவிட்டார். இதுதான் தருணம் என எண்ணிய காகம், பறந்து போய் ஒரு வடையைக் கொத்திக்கொண்டு மரத்தில் போய் அமர்ந்தது.

அடுத்த விநாடியே சொல்லி வைத்தால் போல எங்கிருந்தோ நரி ஒன்று வந்தது. நரி கேட்டது "காக்கையாரே உம்முடைய குரல் ரொம்ப இனிமையானது ஒரு பாட்டுப் பாடுகிறீரா?"

காகம் யோசித்தது.

"இப்படித்தான் எனது மூதாதையார் ஒருவரை ஒரு நரி ஏமாற்றி வடையைப் பறித்தது, நானென்ன முட்டாளா?"

நரியோ மீண்டும் மீண்டும் கேட்டுக்கொண்டிருந்தது. சற்றுநேரம் அமைதியாக இருந்த காகம் தன்னுடைய கையடக்கத் தொலைபேசியை எடுத்தது. அதில் ஒரு எஸ்.எம்.எஸ் ஐ ரைப் செய்தது. அதை நரியினுடைய கையடக்கத் தொலைபேசிக்கு அனுப்பியது.

நரி அதை வாசித்துப் பார்த்தது.... "I 'm busy now. Come later" (நான் இப்போது பிஸியாக இருக்கிறேன். பிறகுவா) என்று இருந்தது. நரி ஏமாற்றமடைந்து தனது வழியில் நடந்து போனது. ●



மகுடியில் ஊதும் ராகம் - புன்னகவராளி


# தர்மத்தின் மதிப்பு

சிறுகதை

சிவபுரத்தில் தர்மன் என்ற பண்ணையார் இருந்தார். அவர் தன் பெயரும் 'புகழும் நிலைத்திருக்க எண்ணி, ஏழைகளுக்கும், தர்ம காரியங்களுக்கும் பணம் செலவழித்து வந்தார். அவர் மனைவி பார்வதியும் அவரைப் போலவே தர்மகாரியங்கள் செய்யவும், அவரைப் போலவே ஏழைகளுக்கு உதவவும் தன் கணவருக்கு துணையாகவும், நல்ல மனைவியாகவும் இருந்து வந்தாள்.

தர்மனின் நண்பர் சாம்பையா நோய் வாய்ப்பட்டு மூலிகை வைத்தியரைப் பார்ப்பதற்காக சிவபுரத்திற்கு வந்தார். அந்த நோய்க்கு ஒரு மண்டலம் மருந்து சாப்பிட வேண்டும் என்று வைத்தியர் சொன்னதால் சாம்பையனும் தர்மன் வீட்டில் தங்கிவிட்டான்.

சாம்பையன் மகா கஞ்சன், வைத்தியத்துக்குப்போக மீதி சாப்பாடு செலவாவது மிஞ்சும் என்று நினைத்து தர்மன்





அண்டார்டிகா பெருங்கடலில் நண்டுகள் இல்லையாம்.

வீட்டிலேயே தங்கிவிட்டான். தர்மனும், அவரின் மனைவியும் செய்யும் தர்ம காரியங்களைக் கண்டு சாம்பையன் வியந்து அவர்களைப் பார்த்து, "இது வீடா? அல்லது தர்மசத்திரமா? எனக்குப் புரியவில்லை" என்று கேட்டான். ''மனிதனாகப் பிறந்தால் கூடஇருக்கிறவர்களுக்கு உதவி செய்யவேண்டும்'', ''மக்கள் சேவையே மகேசன் சேவை" என்று பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள். உனக்கு அனுபவத்தில்தான் புரியும் என்று சாம்பையனிடம் தர்மன் சொன்னார்.

ஒருநாள் மாலை தர்மனும், சாம்பையனும் ஒரு வேலையாக அடுத்த கிராமத்திற்குச் சென்றிருந்தனர். வேலையை முடித்துவிட்டு திரும்பி வந்து கொண்டிருக்கும்போது, தர்மனின் ஊரைச் சேர்ந்த ஒருவர் வேகமாக ஓடிவந்து தர்மனைப் பார்த்து "ஐயா! தங்கள் வீடு தீப்பற்றி எரிகிறது" என்று கூறினான். தர்மன் சற்றும் பதட்டமடையாமல் அவனைத் திரும்பிப்போகச் சொல்லி சாம்பையனுடன் மெதுவாக வீட்டைநோக்கி நடை போடலானார்.

"வீடு தீப்பற்றி எரிகிறது எனத் தெரிந்தும் இவ்வளவு மெதுவாக நடக்கிறீர்களே" என சாம்பையன் வியப்போடு கேட்டான்" அப்போது அந்தப் பக்கமாக வந்த ஒருவன் தர்மனுக்கு வணக்கம் தெரிவித்து ''ஐயா கவலைப் படாமல் மெதுவாகச் செல்லுங்கள். ஊர் மக்களெல்லாம் சேர்ந்து தங்கள் வீட்டுத் தீயை அணைத்து விட்டார்கள். ஊர் மக்களுக்காக தாங்கள் எவ்வளவோ உதவி களைச் செய்திருக்கும் போது தங்களுக்கோ தங்கள் சொத்துக்கோ சிறு இடையூறு நேர்ந்தாலும் மக்கள் பார்த்துக கொண்டிருப்பார்களா? தாங்கள் எங்களுக்கெல்லாம் கடவுள் மாதிரியல்லவா என்று கூறினான்.

தர்மனுடைய தர்மச் செயல்கள் காரணமாக மக்களிடையே எவ்வளவு செல்வாக்கு இருக்கிறது என்பதை உணர்ந்த சாம்பையன் அந்த நிமிடமே தனது கஞ்சத் தனத்தை விட்டு விட்டு பரோபகார சிந்தனையுடன் செயற்படத் தீர்மானித்துக்கொண்டான்.

அ.சிவசுகேந்தினி
தரம்-5E
வ/சைவப்பிரகாச மகளிர் கல்லூரி,
வவுனியா.





நேபாளத்தின் தேசிய விலங்கு - பசு

பூங்கனி ஜூலை மாத இதழில்

அட்டகாசமான

ஆரம்பம்



S.S. வாசன் எழுதும்.....

# “உலக வரலாறு”

உலக மகாயுத்தங்களும், அவற்றின் பின்னணிகளும்.....

கைத்தொழில் புரட்சிகளின் கதைகள்.....

நாடுகாண் பயணங்களின் விபரங்கள்.....

உலகப் புகழ்பெற்ற சுதந்திரப் போர்கள்.....

உலகின் முக்கிய கண்டுபிடிப்புகள்.....

விடுதலைவீரர்களின் வெற்றிக் கதைகள்......

இன்னும் பல சுவையான சுவாரசியமான விடயங்களைத் தாங்கிவரும் முற்றிலும் வித்தியாசமான தொடர்

“உலக வரலாறு”

அனைத்து மாணவர்களும் அவசியம் படிக்கவேண்டிய தொடர்

மிஸ்பண்ணாதீங்க!




ஐ.நா சபையில் 191 நாடுகள் அங்கம் வகிக்கின்றன.

# சின்னச்சின்ன தகவல்கள்

ஒருநாள் மாலைவேளை, தனது வீட்டில் ஓய்வாக இருந்தார் மகாகவி சுப்பிரமணிய பாரதியார். வீட்டுவாசலில் ஒரு குடுகுடுப்பைக்காரன் வந்து "ஐயா தானம் செய்யுங்கள்" என்றான். பாரதியாரிடம் தானம் செய்ய எதுவுமேயில்லை. சிறிது நேரம் யோசித்தார். இறுதியாக தனது இடுப்பில் கட்டியிருந்த வேஷ்டியை தானமாகக் கொடுத்தார் பாரதியார். ■





சர்வாதிகாரி ஹிட்லர், சின்னவயதில் ஓவியராக இருந்தாராம். இவர் 300ற்கு மேற்பட்ட ஓவியங்களை வரைந்துள்ளார். அவற்றில் 4 ஓவியங்கள் இன்றும் அமெரிக்காவிலுள்ள தொல்பொருள் காட்சிசாலை ஒன்றில் உள்ளனவாம். ■



அருகிலிருப்பவர் ஒரு விஞ்ஞானி. ஸ்வீடன் நாட்டில் 21-10-1833இல் பிறந்தவர். 1860ம் ஆண்டு ஒரு சக்திவாய்ந்த வெடிகுண்டை இவர் உருவாக்கினார். அதில் கிடைத்த வருமானத்தைக் கொண்டு சிறந்த அறிஞர்களுக்கு பரிசு வழங்கத் தீர்மானித்தார். இன்றுவரை இப்பரிசு வழங்கப்பட்டு வருகிறது. விஞ்ஞானியின் பெயர் அல்பிரட் நோபல். பரிசின் பெயர் "நோபல் பரிசு" ■

குத்துவிளக்கில் இருக்கும் ஐந்து முகங்கள் எவற்றைக் குறிக்கின்றன தெரியுமா? அவை குடும்பப்பெண்களுக்கு இருக்கவேண்டிய அன்பு, மனவுறுதி, நிதானம், சமயோசிதபுத்தி, சகிப்புத்தன்மை ஆகியவற்றை நினைவுபடுத்தும் தத்துவத்தைக்



சு. கௌரீஷன் ■



புரூஸ்லி தனது 33வது வயதில் 1973ல் காலமானார்.

# www.ஆச்சரியம்.com




## ஜென் கதை

### உண்மை நட்பு

முன்னொரு காலத்தில் சீனத்தில் இரண்டு நண்பர்கள் வசித்து வந்தனர். முதலாமவன், யாழ்வாசிப்பதில் நிபுணன். இரண்டாமவன் அதனைக் கேட்டு அனுபவிப்பதில் நிபுணன். முதலாமவன், யாழில் மலையைப் பற்றி வாசிக்கிறான் என்றால் இரண்டாமவனுக்கு அந்த மலையே தென்படும். மற்றொரு சமயம், தண்ணீரைப்பற்றி வாசிக்கப்படும்போது, இரண்டாமவன் அதில் ஒரு நீரோட்டத்தையே காண்பான். நாட்கள் நகர்ந்தன. கேட்கும் வல்லுவன் நோய்கண்டு இறந்து போனான். முதலாமவன் மனமொடிந்து போனான். இனி யாழையே தொடுவதில்லை என்று உறுதி பூண்டு, தன்னுடைய யாழின் நாண்களை அறுத்துத் தள்ளினான். அதன்பிறகு அவன் வாசிப்பை யாரும் கேட்கவில்லை. அன்றுமுதல் யாழின் நாண்கள் அறுத்தெறிவது என்பது இறுக்கமான நட்பின் அடையாளமாக கருதப்பட்டுவருகிறது.









பூக்காது காய்க்கும் மரங்கள் அத்திமரம், அரச மரம்.




# தயாவின் வாக்கியப் போட்டி

பூங்கனி வாசகர்களுக்காக, இல. 06, கந்தசாமி கோவில் வீதி, வவுனியாவில் அமைந்துள்ள "தயா ஸ்ரோர்ஸ்" ஸ்தாபனம் வழங்கும் போட்டியிது.

கீழே உள்ள படத்தை உற்றுப் பாருங்கள் உங்கள் எண்ணத்தில் தோன்றும் கருத்துக்களை அழகிய வாக்கியமாக நான்கு வரிகளில் எழுதியனுப்புங்கள்.

சிறந்த வாக்கியங்களை எழுதும் 10 பேருக்கு பெறுமதி வாய்ந்த பரிசுகள் வழங்கப்படும்.



முடிவுத் திகதி 30-06-2005

அனுப்பவேண்டிய முகவரி

**தயாவின் வாக்கியப்போட்டி இல-02,**
**பூங்கனி,**
**இல. 141, திருநாவற்குளம், வவுனியா.**

**வெற்றிபெற்ற வாக்கியங்களும், வெற்றிபெற்றோர் விபரமும், ஆகஸ்ட் மாத பூங்கனியில் வெளியாகும்.**


# தயா ஸ்ரோர்ஸ்

**இல 06, கந்தசாமி கோவில் வீதி, வவுனியா.**

## அனைத்து வகையான

பயிற்சிப் புத்தகங்கள், கதைப்புத்தகங்கள், பாடசாலை உபகரணங்கள், அன்பளிப்புப் பொருட்கள் ஆடம்பரப் பொருட்கள், மாதாந்த, வாராந்த சஞ்சிகைகள் போன்றவற்றை பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

T.P: 024 - 2222386
077 - 3025436




ஆடுகள் அதிகமுள்ள நாடு - அவுஸ்திரேலியா


# கணினி  ணா கணினி

குரும்பையூர் கணினியன்

**நம்பகத்தன்மை** - கணினி மிகவும் நம்பகமானது. அது தானே நமக்குத் தேவையானதும் ஏனென்றால் அநேகமாக அது எங்களிடம் இருப்பதில்லையே. சிறந்த மனிதன் ஆயிரம் இயக்கங்களுக்கு ஒரு தவறு செய்கிறான். கணினிகள் ஒரு நொடியிலே எத்தனை இலட்சம் பணிகளைச் செய்தாலும் தவறு செய்வதில்லை. சில வேளைகளில் நீங்கள் எதிர் பார்த்த விளைவு கிடைக்கவில்லை என்றால் அது கணினியின் தவறல்ல. நீங்கள் கொடுத்த தரவுகள், கட்டளைகளில் தவறு ஏற்பட்டிருக்கும் என்பதே உண்மை. கல்லடித்துவிட்டது, முள்ளுக்குத்திவிட்டது என்று சொல்லிக்கொண்டிருக்கும் நாம் என்று எமது தவறை ஒத்துக் கொண்டோம். (கோவிக்காதீர்கள் இதுவும் தத்துவம்தான்)




**தானியக்கம்** : இது கணினியின் மற்றுமொரு சிறந்த பண்பு. அதாவது கணிப்பான் (கல்குலேட்டர்) போன்றவற்றில் கணக்கீடுகளை செய்கின்ற போது ஒரு சில தரவுகளைக் கொடுத்து ஒரு கணிப்பீட்டைச் செய்துவிட்டு பின்பு அடுத்த தரவுகளைக் கொடுத்து அடுத்த கணிப்பீட்டைச் செய்கிறோம். இப்படியாக கட்டங் கட்டமாக செய்கின்ற தன்மை கணினியில் இல்லை. நாம் நமது திட்டத்தை முழுமையாக கணினிக்கு அளித்துவிட்டால் அது விபரங்களை எமக்கு ஒட்டுமொத்தமாக






“இந்தியாவின் 2020” எனும் நூலை எழுதியவர் -ஜனாதிபதி அப்துல்கலாம்.

வழங்கிவிடும். செயலிற்கான கட்டளைகளை கருத்தில் கொண்டு படிப்படியாக பணியாற்றி முடிவினை எமக்கு அளிக்கும். இடையிடையே நாம் தலையிட்டு உத்தரவுகள் பிறப்பிக்க வேண்டியதில்லை.

பலர் சொல்லக் கேள்விப்பட்டிருப்பீர்கள் "கப்பல் பார்க்க போனவன் போல்" என்று. அதன் அர்த்தம் என்ன. ஒரு கப்பல் பிரயாணத்தைப் பற்றி விபரம் அறியப் போனவன், முட்டாள் வேலைக்காரன் போல் ஒரே முறையில் எல்லா விபரங்களையும் அறியாமல் பார்க்க

ஒருக்கா, கேட்க ஒருக்கா போயவந்தால் எப்படி இருக்கும். அப்படி முட்டாள் வேலைக்காரன் அல்ல இந்தக் கணினி. மிகப் புத்திசாலி. அனைத்தையும் தெளிவாகக் கேட்டு ஒவ்வொரு முறையும் உத்தரவுக்காக காத்திராமல் செயற்படக்கூடிய கெட்டிக்கார வேலைக்காரன்.




**திட்டமிடக்கூடிய தன்மை :** அதாவது ஒரு திட்டத்தை "செயல்திட்ட நிரல்களாக" (Programes) கணினிக்கு வழங்கிவிட்டால் அதற்கேற்ப செயற்படக் கூடியது. அதுமட்டுமல்லாமல் அத்திட்டத்தை நினைவில் நிறுத்தி பின்னர் தேவைப்பட்ட கட்டத்தில் பயன்படுத்தவும் கூடியது. எனவே பெரிய சிக்கலான வேலைகளை, மனித மூளைகளைக் குழப்புகிற பல செயல்களை ஒரு "பட்டினை" தட்டிவிட்டு "ஹாயாக" இருந்து செய்துவிட்டு போகலாம்.

**நினைவாற்றல்** - ஒரு கணினியின் நினைவாற்றல் என்பது மிகச் சிறப்பானது. மெகா பைட் (Mega byte), ஜிகா பைட் (Gega byte) என்கின்ற அளவிற்கு நினைவுகளை தக்கவைத்து மனிதன் பயன்படுத்த தவறிய


**ஓடிஓடிப் படிக்கணும்...**

உலகின் மிகப்பெரிய வங்கிகளெல்லாம் அமெரிக்காவில் இருப்பதென்னவோ உண்மைதான். ஆனால் முதலாவது வங்கி இத்தாலியில்தான் உருவாக்கப்பட்டது. சரி ரொம்ப ஃபீல் பண்ணாதீங்க 13ம் பக்கம் திரும்புங்க.



வங்காள தேசத்தின் தேசியக் கனி - பலாப்பழம்.

7×60 3×30 420 90 510 2



ஞாபகப்பகுதியை நூறுவீதம் பூரணமாகப் பயன்படுத்தி தன் செயல்திறனில் விஞ்சி நிற்கின்றது. இப்படியெல்லாம் நினைவாற்றல் எமக்கும் இருந்திட்டால் பள்ளிப் பாடங்கள் எல்லாம் "ஜுஜுப்பி" ஆகிவிடும் இல்லையா?"

இப்போ ஒத்துக்கொள்கிறீர்களா கணினி என்பது ஒரு வியத்தகு இயந்திரம்தானே. அத்தோடு இன்னுமொன்றும் விளங்கவேண்டும். நாலுபேர் கூடி நல்ல முகூர்த்தம் பார்த்து நாலு மாதத்தில் செய்துமுடித்த இயந்திரமல்ல கணினி. அது தோன்றி விதம் சிக்கலானது. பல பாரம்பரியங்களைக் கொண்டது. எத்தனையோ சின்னச்சின்ன முன்னேற்றங்களில் பாரிய வெற்றியைப் போன்றது.

இன்று வளர்ந்து எம்முடன் நண்பனாய், சேவகனாய், உறவினனாய் கலந்து எம்மை மகிழ்வித்துக் கொண்டிருக்கின்ற கணினியின் ஆரம்ப காலத் தோற்றத்தையும், வளர்ச்சியையும், தவண்டதையும், நடந்ததையும் அடுத்த இதழில் பார்ப்போம். அதுவரைக்கும் கணினியின் நினைவுகளுடன் இருப்போம்.........

- மிகுதி அடுத்த Click-ல்


**சகல தொடர்புகளுக்கும்....**

# பூங்கனி

இல. 141, திருநாவற்குளம்,
வவுனியா.
தொ.பே : 077 6674609
E-mail : mmcpoonkani@yahoo.com


இம்மாத பூங்கனி வாசிச்ச எல்லாருக்கும் நன்றிகள்!
மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.
அப்ப நான் வரட்டே.....



**ஓடிஓடிப் படிக்கணும்....**

அடடா, சறுக்கிவிட்டதே! சீனர்களுக்கு பாம்பு, பல்லி, தவளை, இந்த அயிட்டங்கள்தான் பிடிக்கும், வெட்டுக்கிளிக் காரர்கள் உகண்டா நாட்டினர். பிழையாக விடை சொன்ன உங்களுக்கு கொஞ்சம் தவளைகளைப் பொரித்துச் சாப்பிடத்தரலாம். சரி 46ம் பக்கம் வாருங்கள்.



நான்கு முழங்கால்கள் ஒரே ஒரு விலங்கு - யானை.

# TECHNO WORLD

COMPUTER EDUCATION





## சிறுவர் கணினி வகுப்புக்கள்





| | |
|---|---|
| Level - 1 | Diploma - 4 Month |
| Level - 2 | Diploma - 4 Month |
| Level - 3 | Diploma - 4 Month |
| Level - 4 | Diploma - 3 Month |

மேலதிக விபரங்களுக்கு அருகில் உள்ள பயிற்சி மையத்தை நாடுங்கள்.

சென்னைப் பல்கலைக் கழகத்தின் அங்கீகாரம் பெற்ற பயிற்சி கல்லூரியாக 2004 முதல் செயற்பட்டு வருகிறது.

உயர்தரத்திலான கணினிக் கல்விக்கு இன்றே அணுகுங்கள்

# TECHNO WORLD

| | |
|---|---|
| 1ம் குறுக்குத்தெரு | - 024 2221486 |
| குடியிருப்பு | - 024 4589718 |
| குருமன்காட்டு சந்தி அருகில் | - 024 2223072 |
| மாங்குளம் சந்தி நேரியகுளம் | - |
| அனுராதபுரம் புதிய நகரம் | - 025 4581327 |

★ மிகக் குறைந்த தவணைக் கட்டணம்

★ இலவசப் பாடப் புத்தகங்கள்

★ பொருத்தமான நேரத்தை தெரிவுசெய்யும் வசதி



இச் சஞ்சிகை இல. 141, திருநாவற்குளம் வவுனியாவில் அமைந்துள்ள காற்றுப்பப்ளிகேஷன் சார்பாக, 61B, முதலாம் குறுக்குத்தெரு, வவுனியாவில் அமைந்துள்ள வாணி கணனி பதிப்பகத்தில் அச்சிட்டு 2005 ஜூன் முதலாம் திகதி வெளியிடப்பட்டது.



Saravanas
சரவணாஸ் සරවනාස්
173
Kurumankadu Junction Mannar Road Vavuniya.
குழந்தைகளுக்கான உணவு வகைகள்
இறக்குமதி செய்யப்பட்ட கேக் வகைகள்
இனிப்பு வகைகள்
ஐஸ்கிரீம்ஸ்
தரமான பால் வகைகள்
பால் உணவுகள்
கேக் வகைகள்
சோசேஜ் மீற்போல்ஸ்
பொம்பே சுவீற்ஸ்
பிஸ்கட்ஸ்
மற்றும் அனைத்துவகையான மளிகைப் பொருட்களையும் உயர்தரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
சரவணாஸ்
173, குருமன்காட்டுச் சந்தி, மன்னார் வீதி, வவுனியா.
Design & Print by : Vaani Vavuniya 024 2223658